வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 13.05.2023 சனிக்கிழமை இதழ் : 155 பக்கங்கள் : 16

## தமிழ் எம். பிக்கள் - ஜனாதிபதி

# நேற்றைய பேச்சு இரத்து

கொழும்பு, மே 13

**இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வடக்கு, கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று நடைபெறவிருந்த பேச்சு இரத்து செய்யப்பட்டது.**

எனினும், அதிகாரப் பகிர்வு தொடர்பான இந்தப் பேச்சு நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று மாலை 5 மணிக்கு 'நலன்புரி நன்மைகள் வழங்குதல்' தொடர்பான சட்டமூலம் வாக்கெடுப்பு நடைபெறவிருந்தது. இந்த வாக்கெடுப்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கும் நோக்கில் பேச்சு ஒத்திவைக்கப்

15

## ரூ. 200ஆல் குறைகிறது பால் மா!

கொழும்பு, மே

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை கிலோ 200 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விலை குறைப்பு நடைமுறைக்கு வரும் என்று வர்த்தக அமைச்சர் அறிவித்துள்ளார். (ஐ)

## பாடசாலைகளுக்கு 27 முதல் விடுமுறை

கொழும்பு, மே 13

நாட்டின் அனைத்து பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் ஜூன் 12ஆம் திகதி வரை விடுமுறை அறிவித்துள்ளது கல்வி அமைச்சு.

எதிர்வரும் 29ஆம் திகதி க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை ஆரம்பமாகிறது. பாடசாலைகள் பரீட்சை நிலையமாக செயல்படுவதாலேயே அவற்றுக்கு விடுமுறை அளிக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆட்சி மாறினாலும் கொள்கைகள் மாறக்கூடாது

நாமல் எம். பி.

கொழும்பு, மே 13

ஆட்சி மாறினாலும் பொருளாதார கொள்கைகள் மாற்றமடையக் கூடாது. தேசிய கொள்கை வகுப்பு ஆணைக்குழுவை அரசமைப்பின் ஊடாக நிறுவ விசேட கவனம் செலுத்த வேண்டும். சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் பாராளுமன்றத்துக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டால் எதிர்வரும் காலங்களிலும் குழு அமைப்பது, அறிக்கை சமர்பிப்பது மாத்திரம் மிகுதியாகும் என குறு

15



தமிழின இனவழிப்பை நினைவேந்தல் அடையாளமாக 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' வழங்கல் வடக்கு - கிழக்கில் இடம்பெறுகிறது. நேற்றைய தினம் முள்ளிவாய்க்காலில் கஞ்சி தயாரிக்கும் பணியில் மக்கள்...!

## சிறந்த பாண் உற்பத்தியாளராக பாரிஸில் சாதித்த ஈழத் தமிழன்!

12



## பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிராக திருமலையில் இன்று போராட்டம்!

திருகோணமலை, மே 13

திருகோணமலை வில்லூன்றி கந்தசுவாமி ஆலய (நெல்சன் திரையரங்கம் முன்பாக) காணியில் பௌத்த சின்னங்களை நிறுவுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கவனவீர்ப்பு போராட்டம் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு அந்தப் பகுதியில் நடைபெறவுள்ளது.

திருக்கோணேஸ்வரம் ஆலயத்துக்கு சொந்தமான பூர்வீக சொத்துகள் புதைந்துள்ளன என்று சரித்திரபூர்வமாகக் கூறப்படுகின்றது. 2013 அல்லது அதை அண்மித்த காலப் பகுதியளவில் தொல்லியல் திணைக்களத் தால் இந்தக் அக்காணி எல்லையிடப்பட்டு அவர்களின் பராமரிப்பின் கீழ் கொண்டு வரப்பபட்டது.

15

## சமுர்த்தி பணத்தை அரசாங்கம் தொடாது!

### நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, மே 13

சமுர்த்தி சேமிப்பு பணத்தை அரசாங்கம் தொடாது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அத்துடன், சமுர்த்தி வங்கியை கலைப்பது தொடர்பில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

நலன்புரி உதவிகள் வழங்கும் திட்டம் மீதான விவாதத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். சமுர்த்தியில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தவே இந்தச் செயல் என்றும் சமுர்த்தி பட்டியலை புதுப்பிப்பது இதன் மற்றொரு நோக்கமாகும்.

சமுர்த்தி என்பது நன்மைகளை பகிர்ந்தளிப்பதற்கு மாத்திரமான நிறுவனமல்ல. மக்களை வலுவூட்டுவதே இதன் பிரதான நோக்கம். சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி

15

## முள்ளிவாய்க்காலில் இருந்து ஊர்தி பவனி ஆரம்பமானது!

முல்லைத்தீவு, மே 13

தமிழினபடுகொலையை நினைவேந்தும் விதமாக முள்ளிவாய்க்காலில் இருந்து ஊர்தி பவனி நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

இறுதிப் போரில் தமிழ் மக்கள் பலியெடுப்புக்கும் - அவலங்களுக்கும் உள்ளான முள்ளிவாய்க்கால் கடற்கரையில் இருந்து முள்ளிவாய்க்கல் நினைவேந்தல் குழுவினரால் இந்தப் பவனி ஆரம்பிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் கடற்கரையில் நினைவுச் சுடர் ஏற்றப்பட்ட பின்னர் இந்த ஊர்தி பவனிக்கத் தொடங்கியது.

இந்த ஊர்தி வவுனியா, மன்னார் , கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களை சென்று முள்ளிவாய்க்கால் இறுதி நாளான எதிர்வரும் 18ஆம் திகதி பரந்தன் ஊடாக மீண்டும் முள்ளி வாய்க்காலை சென்றடையும்.

நேற்றைய தினம் இந்த ஊர்தி வவுனியாவை சென்றடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)


## கூலிக்காக வன்செயலில் ஈடுபட்ட 8 பேர் குழு நெல்லியடியில் கைது

வடமராட்சி, மே 13

கூரிய ஆயுதங்கள் மற்றும் பொல்லுகளால் கடும் காயம் விளைவிக்கும் வகையில் குடும்ப தலைவரை தாக்கி - அந்தக் காணொலியை 'ரிக்ரொக்' செயலியில் வெளியிட்ட 8 பேர் நேற்றிரவு கைது செய்யப்பட்டனர்.

வடமராட்சி - நெல்லியடி பகுதியைச் சேர்ந்த 8 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் கடந்த 10 நாட்களாக தலை

15



## உயிர் ஆபத்துக்கு மத்தியில் காலிமுகத்திடல் போராளிகள்!

### எதிர்க்கட்சி தலைவர் சஜித் சாடல்

கொழும்பு, மே 13

ராஜபக்ஷ அரசாங்கத்தின் அனுசரணையுடன் காலிமுகத்திடல் போராட்டத்தின்மீது தாக்குதல் நடத்தப்பட்டு ஓராண்டு நிறைவடைந்ததுள்ளது.

இந்த நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட செயல்பாட்டாளர்மீது மொட்டு கட்சியின் பிரதிநிதி நடத்திய தாக்குதல், போராட்டத்துக்கு பங்களித்த அனைவரையும்

15



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

மிகவும் எதிர்பார்ப்புடன் வடக்கு - கிழக்கு எம்.பிக்களுடனான ஜனாதிபதியின் சந்திப்பு நடந்து முடிந்திருக்கின்றது.

முதல்நாள் பேச்சு பற்றிய செய்திகள் பலவாறு பத்திரிகைககளில் வெளிவந்ததை வாசகர்கள் படித்திருப்பார்கள்.

புதிதாக காணிகளை ஆக்கிரமிப்பதை உடன் நிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டதாக ஒரு தரப்பு தெரிவித்திருந்தது.

ஆனால், வேறு சிலரோ வழக்கம்போல ஒவ்வொரு விடயமாக கலந்துரையாடப்பட்ட போதிலும் அவை எவற்றுக்குமே தீர்வு காணப்படவில்லை என்றும் எல்லாம் கவனிக்கப்படும் என்றவாறாகவே ஒவ்வொரு விடயங்களும் முடித்து வைக்கப்பட்டன எனவும் பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட ஓர் எம். பி. (அவருக்கு அங்கு பேசப்பட்டவை நிச்சயம் எல்லாமே புரிந்திருக்கும். ஏனெனில், அவருக்கு மொழி தெரிந்திருந்ததால்) ஒருவர் ஒரு விடயத்தை மட்டும்தான் அவதானித்ததாகக் கூறினார்.

அதாவது, பேசப்பட்ட அனைத்து விடயங்களிலுமே ஜனாதிபதி ரணில் முழுமையான தகவல்களை அறிந்து வைத்திருப்பதை அவதானிக்க முடிந்தது என்றார்.

பேச்சுக்கு முன்னரே, எமது எம்.பிக்களிடையே போட்டி ஏற்பட்டு விட்டதை வாசகர்கள் அவதானித்திருப்பார்கள்.

முதலில் வடக்கு எம். பிக்களை மாத்திரம் பேச்சுக்கு ஜனாதிபதி அழைத்திருந்தார். உடனடியாகவே இனப்பிரச்னைக்கான தீர்வு குறித்து பேசுவதானால் கிழக்கு எம்.பிக்களையும் அழைத்து பேசவேண்டும் என்று ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதினார். அதனால் பேச்சுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக ஜனாதிபதியிடம் நேரம்கேட்டு பெற்றுக்கொண்ட தமிழரசு எம்.பிக்கள் ஜனாதிபதியை சந்தித்து அதே கோரிக்கையை முன்வைத்தனர்.

அதாவது ரெலோ முன்வைத்த கோரிக்கையை தாமும் முன்வைத்து ஜனாதிபதி அதற்கு சம்மதித்ததும் தமது கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டாரென தமிழரசு அதில் இலாபம் பார்த்தது.

ஜனாதிபதி முதலில் மூன்று நாட்களுக்கு பேச்சுக்கு ஏற்பாடு செய்திருந்தார். அதில் முதல் நாள், தற்போதைய சமகால பிரச்னைகள்: அதாவது காணி அபகரிப்பு, பௌத்த விகாரைகள் அமைத்தல் மற்றும் கைதிகள் விவகாரம் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் பேன்றவை குறித்து பேசுவது.

இரண்டாவது நாள் அதிகார பகிர்வு பற்றி பேசுவது. மூன்றாவது நாள் வடக்கு அபிவிருத்தி பற்றி பேசுவது.

ஆனால், தமிழரசுடனான பேச்சுக்களின் பின்னர் மூன்றாம் நாள் நிகழ்ச்சி இரத்து செய்யப்பட்டது.

இதற்கு முன்னரும் ஜனதிபதி தமிழ் தரப்புடன் கடந்த ஆண்டு பேசியிருந்தார். அந்தப் பேச்சுகளின்போது சில விடயங்களை செய்யாவிட்டால் தாங்கள் தொடர்ந்து பேச்சுகளில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று கூறி தமிழ் கட்சிகள் பேச்சை முடித்திருந்தன.

இப்போது, மீண்டும் பேச்சு ஆரம்பமாகியிருக்கின்றது நல்ல விடயம்தான். ஆனால், கடந்த பேச்சுக்களில் செய்யச் சொல்லிக் கேட்டவை இன்னமும் செய்து முடிக்கப்படவில்லை.

ஆனால், அதற்குப் பின்னர் புதிதாகப் பல பிரச்னைகள் வந்திருக்கின்றன. முக்கியமாக காணிகள் அபகரிப்பு, பௌத்த விகாரைகள் கட்டுதல் என்று, அவை பற்றி பேசத்தான் வேண்டும் - அதுதான் பேசினார்கள். காணி அபகரிப்புக்கு தடைவிதித்து ஜனாதிபதி உத்தரவிட்டதாக இப்போது கூறப்பட்டிருக்கின்றது நல்லதுதான். இனி காணிகள் அபகரிப்பு நடக்காது என்று நிம்மதிப் பெருமூச்சு விடுவோம்.

பேச்சு என்றால் அதில் எவ்வளவு பேர் கலந்துகொள்கின்றார்கள் என்பதல்ல. எதைப் பேசுகிறார்கள் என்பதே முக்கியமானது.

இந்த பேச்சுகள் பற்றிய அறிவித்தல் வந்ததுமே, கிழக்கு மாகாண எம்.பிக்களையும் பேச்சுக்கு அழைக்க வேண்டும் என்று கேட்ட செல்வம், பிரச்னைகளைப் பற்றி பேசுவதற்கு தமிழ் கட்சிகளின் தலைவர்களை மட்டும் அழையுங்கள் என்று கோரிக்கை விடுத்திருந்தால், அது வடக்கு மாகாணத்தை சேர்ந்தவராக இருந்தாலும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் தமிழ் மக்கள் சந்திக்கும் பிரச்னைகளை அவர் ஒரு கட்சித் தலைவராக பேசியிருக்கலாமே.

கடைசியில் சுதந்திரக் கட்சி எம். பி. அங்கஜன் பேச்சில் கலந்துகொண்டது அவரின் தனிப்பட்ட முடிவு என்றும் கட்சி ரீதியாக அவர் கலந்து கொள்ளவில்லை எனவும் இப்போது கூறப்படுகின்றது.

ஆக, அவரின் பிரசன்னமே அவசியமற்ற ஒன்றாகியிருக்கின்றது. இதுபோலத்தான் எல்லாமே. கூட்டமாகப் படையெடுத்துப்போய் தமிழ் மக்களின் உயிர்நாடியான பிரச்னைகளை நகைச்சுவையாக்குவதை இனியாவது நிறுத்தவேண்டும்.

இப்படி எல்லோரையும் அழைத்தால் அவர்கள் வந்து என்ன பேசுவார்கள் என்பதை தமிழ் மக்களைவிட ஜனாதிபதி அதிகம் அறிந்து வைத்திருக்கிறார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விடயங்களைப் பேசி எதையுமே செய்ய முடியாமல் பண்ணுவார்கள் என்பதை அறிந்ததால்தான் எல்லோரையும் அழைத்தாரோ தெரியவில்லை.!

- ஊர்க்குருவி

## முள்ளிவாய்க்கால் கஞ்சி முள்ளிவாய்க்காலிலும்!

முல்லைத்தீவு, மே 13

“கஞ்சி பரிமாறுவோம் முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கதை பகிர்வோம்” என்ற தொனிப்பொருளில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரமான மே 12 தொடக்கம் மே 18 வரையிலான நாட்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் நேற்று முள்ளிவாய்க்காலிலும் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் பொது அமைப்புகளும் இணைந்து இதனை முன்னெடுத்தன.

மே 12 முதல் மே 18 வரை தமிழின படுகொலை வாரம் நினைவுகூரப்பட்டு வரும் நிலையில், 2009 இறுதிப்போரின் போது மக்களின் பசியை தீர்த்த ஒரேயோர் உணவாக கஞ்சியே இருந்தது. இதனை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் அடையாளமாக கடைப்பிடிக்கும் விதமாகவே இந்த திட்டம் முன்னெடுக்கப் படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிமெந்தின் விலை குறைகின்றது!

கொழும்பு, மே 13

அடுத்த வாரம் சிமெந்தின் விலை குறைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது, சிமெந்து மூடை ஒன்றின் விலை 2,750 ரூபாயாக உள்ளது.

எவ்வாறாயினும், அடுத்த வாரம் ஒரு மூடை சிமெந்து விலையில் கணிசமான அளவு குறையும் என எதிர் பார்ப்பதாக சிமெந்து உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், மே 13

பிரபல ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன் எழுதி வெளியான பத்திரிகையில் பகிர்வுகளின் தொகுப்பான ‘லண்டனில் இருந்து விமல்’ நூல் அறிமுக விழா எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில், நல்லை ஆதின குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் பிரதம விருந்தினராகவும் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

## 16, 17ஆம் திகதிகள் யாழ்ப்பாணத்தில் விசேட டெங்கு கட்டுப்பாட்டு தினங்கள்!

### யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மே 13

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயின் பரவலை கட்டுப்படுத்தவும் இறப்புகளைத் தவிர்ப்பதற்கும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் அனைவரும் பங்களிக்க வழங்க வேண்டும் என தெரிவித்த யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன், விசேட டெங்கு கட்டுப்பாட்டுத் தினங்கள் தொடர்பாகவும் அறிவித்தார்.

டெங்கு நிலை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் இவ்வருடத்தில் இதுவரையான காலப் பகுதியில் ஆயிரத்து 160 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். அத்துடன், ஓர் இறப்பும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது பெய்துவரும் பருவ மழைக்குப் பின்னர் யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

எனவே டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை உடனடியாக தீவிரப்படுத்த வேண்டிய ஓர் அவசர தேவை உணரப்படுகின்றது. எனவே, யாழ். மாவட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவும் ஒருங்கிணைப்பதற்கும் எதிர்வரும் 16 மற்றும் 17 ஆகிய இரண்டு தினங்கள் விசேட டெங்கு கட்டுப்பாட்டு தினங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன.

இந்த விசேட தினங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயல்பாடுகளை திட்டமிடவும் ஒருங்கிணைப்பதற்கும் பிரதேச மட்ட டெங்கு கட்டுப்பாட்டு குழுக்கூட்டம் பிரதேச செயலாளர்கள் தலைமையிலும் கிராமியமட்ட டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்கள் கிராம சேவையாளர்கள் தலைமையிலும் இவ்வாரம் நடைபெறும்.

இக்காலப்பகுதியில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழிப்பதன் மூலம் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு அனைவரும் பங்களிப்பு செய்ய வேண்டும். பொது மக்கள் தமது வீடுகளையும் வீட்டுச் சுற்றாடலையும் பார்வையிட்டு டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களை அழிக்க வேண்டும். வீட்டுச் சுற்றாடலில் காணப்படும் நீரேந்தும் கொள்கலன்களான சிரட்டைகள், இளநீர் கோம்பைகள், தகரப்பேணிகள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், ஐஸ்கிறீம் கப், பொலித்தீன் பைகள், பழைய ரயர்கள், தண்ணீர் போத்தல்கள் போன்றவற்றை அகற்ற வேண்டும். பூச்சாடிகளில் நீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்ளல் வேண்டும். தண்ணீர் பீலிகளில் நீர் தேங்காதவாறு துப்பரவு செய்தல் வேண்டும்.

மீன்தொட்டிகளில் தண்ணீரை அடிக்கடி மாற்றுதல் வேண்டும். தண்ணீர் சேகரித்து வைக்கும் பிளாஸ்ரிக் வாளிகளையும் தொட்டிகளையும் நன்றாகத் தேய்த்து கழுவ வேண்டும்.

பாடசாலைகளில் அதிபர் ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் மாணவர்கள் சிரமதான அடிப்படையில் பாடசாலை வளாகத்தில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழிக்க வேண்டும். அரச தனியார் அலுவலகங்கள் வர்த்தக நிலையங்கள் வணக்கஸ்தலங்கள் பொதுச் சந்தைகள் போன்ற இடங்களைச் சிரமதான அடிப்படையில் சுத்திகரிக்க வேண்டும். பராமரிப்பின்றி காணப்படும் காணிகள் மற்றும் வீடுகளை உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் உடனடியாக துப்பரவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைக் கண்காணிக்க வீடுகளுக்கும் பொது நிறுவனங்களுக்கும் டெங்குக் கண்காணிப்பு குழுவினர் வருகை தரவுள்ளனர். இக்களத்தரிசிப்பின் போது டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காதவர்களுக்கு முன்னெச்சரிக்கை வழங்கப்படும்.

அதன்பின்னரும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதுவிடின் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போதைய காலப்பகுதியில் காய்ச்சல் கடுமையான தலைவலி மூட்டுவலி போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக தகுந்த மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுங்கள்.

குறிப்பாக, கர்ப்பவதிகள் முதியோர்கள் இவ்விடயத்தில் மிக அவதானமாகவும் துரிதமாகவும் மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

டெங்கு நோயுடன் ஒருவர் உரிய நேரத்தில் மருத்துவ மனைக்கு சமுகம் தந்தால் அவரை முற்றாகக் குணப்படுத்த முடியும். அதேவேளை மிக தாமதமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டால் இறப்புக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்பதனை கடந்த காலங்களில் எமது மாவட்டத்தில் கண் கூடாகக் காணக் கூடியதாக இருந்தது.

எனவே, யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பலைக் கட்டுப்படுத்தவும் இறப்புகளை தவிர்ப்பதற்கும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் அனைவரும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
13.05.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தொல்பொருள் திணைக்களத்தை இயக்குபவர்கள்?

தொல்பொருள் திணைக்களத்துக்கு பிக்குகளிடமிருந்து பணம் வருவதாக அதன் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். ஜனாபதியுடனான சந்திப்பின்போதே இந்தத் தகவல் வெளியிடப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் தொல்பொருள் திணைக்களம் அரசின் அங்கமாக இருந்தபோதிலும்கூட அதனை அரசாங்கத்துக்கு வெளியில் இருப்பவர்களே இயக்கிவரும் உண்மை தற்போது அம்பலமாகியிருக்கின்றது. இதனை வெளிக்கொண்டு வந்தமைக்காக ரணிலுக்கு நன்றி சொல்லலாம்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்திலும்கூட தொல்பொருள் திணைக்களம் அதன் செயல்பாடுகளை நிறுத்தியிருக்கவில்லை. தற்போது பௌத்த மயமாக்கல் - குறிப்பாக, இந்து ஆலயங்களை இலக்கு வைத்து இடம்பெறும் நகர்வுகள் அனைத்துமே பௌத்த பிக்குகளின் திட்டமிட்ட செயல்பாடுகள் என்பது தெளிவாகியிருக்கின்றது. இலங்கைத் தீவில் அரசியல் கட்சிகள், அரச அதிகாரிகளுக்கு அப்பால் இரகசிய அதிகார கட்டமைப்பு ஒன்று இயங்கிவருகின்றது. அது அரசின் அதிகார எல்லைக்கு வெளியிலிருந்து அரசாங்கத்தையும் அரச கட்டமைப்புக்களையும் திரை மறைவில் இயக்கி வருகின்றது.

தமிழ்த் தேசிய அரசியல் எழுச்சியுற்ற காலத்திலிருந்து தமிழரின் தனித்துவமான அரசியல் இருப்பை பலவீனப்படுத்துவதில் பௌத்த மதக் கட்டமைப்பும் சிங்கள அரசியலும் பின்னிப்பிணைந்தே இயங்கிவருகின்றன. இப்போது ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள் திணைக்களத்தை எச்சரித்தாலும்கூட, ஒரு கட்டத்துக்கு மேல் பௌத்த- சிங்கள கட்டமைப்புகளை புறம்தள்ளிச் செயலாற்றக்கூடிய வல்லமையுள்ள அரசியல் தலைவர்களை இன்னும் தென்னிலங்கை காணவில்லை.

தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தல்களின்போது, ஒருவரை விடவும் மற்றவர் நல்லவர் என்னும் அடிப்படையில் நபர்களை தெரிவு செய்தாலும்கூட, எவரும் சிங்கள - பௌத்த கட்டமைப்புகளின் பிரத்தியேக வேலைத் திட்டங்களை கேள்விக்கு உள்ளாக்கக்கூடிய தகுதி நிலையில் இருந்ததில்லை. ஒப்பீட்டு அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்க சில விடயங்களை வெளிப்படையாகப் பேசினாலும்கூட, அவராலும் பௌத்த - சிங்கள கட்டமைப்புகளின் இரகசிய நகர்வுகளை ஒரு கட்டத்துக்கு மேல் கட்டுப்படுத்த முடியாது.

இந்த நிலையில், தமிழ் மக்களுக்கு முன்னாலுள்ள தெரிவு என்ன? முதலில் வடக்கு - கிழக்கில் தமிழர்கள் அதிகாரத்தை முடிந்தவரையில் கையாளக்கூடிய நிலையிலிருக்க வேண்டும். தற்போதைய சூழலில், மாகாண சபை முறைமை ஒன்றுதான் தமிழர்கள் அதிகாரத்தை கையாள்வதற்குள்ள ஒரேயொரு வாய்ப்பாகும். இதனை மறுதலிக்கும் ஒரு குழுவினர் இருக்கலாம் - ஆனால், அவர்களால் தாங்கள் கூறும் விடயத்தில் இதுவரையில் சிறியளவில்கூட முன்னேற்றத்தைக் காண்பிக்க முடியவில்லை. அவர்கள் அடிப்படையில் தோல்வியடைந்த தரப்பினராவர்.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில், ஆரம்பத்திலிருந்தே யதார்த்தமாக பேசி வருபவர்களின் வாதமே நடைமுறையில் வெற்றி பெற்றிருக்கின்றது. அந்த வகையில், மக்களின் நலனை கருத்தில் கொண்டு யதார்த்தபூர்வமாக சிந்திப்பவர்கள் அனைவருமே மாகாண சபை முறைமையை பயன்படுத்துவதிலுள்ள சாதகமான அம்சங்களை புரிந்து கொண்டிருக்கின்றனர். மக்களும் யதார்த்தத்தை உணர்ந்திருக்கின்றனர்.

இந்தப் பின்புலத்தில் பௌத்த - சிங்கள ஆக்கிரமிப்பு நகர்வுகளை முடிந்தவரையில் தடுக்க வேண்டுமாயின், மாகாண சபை முறைமை இயங்கு நிலையில் இருக்க வேண்டும். அதனை பயன்படுத்திக் கொண்டுதான் விடயங்களை தமிழர்களால் கையாள முடியும். வெறுமையிலிருந்து எதனையும் செய்ய முடியாது. 13ஆவது திருத்தச் சட்டத்தில், வடக்கு - கிழக்கின் தொல்பொருள் அடையாளங்களை கையாள்வதற்கான ஏற்பாடுகளும் இருக்கின்றன. ஆனால், அதனை தமிழ் அரசியல் தரப்பினர் முறையாகக் கையாளவில்லை. விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்தபோது, இது தொடர்பான விடயங்களை கையாள்வதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கமுடியும். ஆனால், கட்சி சண்டைகளிலேயே மாகாண சபை நிர்வாகத்தை மூழ்கடித்தமையால், சாதகமான விடயங்களை கையாளவில்லை. சிங்கள - பௌத்த கட்டமைப்பை ஒருபோதுமே வெறுமையிலிருந்து எதிர்கொள்ள முடியாது.

# சப்ரகமுவ பல்கலை. கணினி பீடத்தின் முதல் பீடாதிபதியாக பேரா. வசந்தப்ரியன்

கொழும்பு, மே 13

சப்ரகமுவ பல்கலைக்கழக கணினி பீடத்தின் முதலாவது பீடாதிபதியாகப் பேராசிரியர் ச. வசந்தப்ரியன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2022 டிசெம்பர் 27 ஆம் திகதி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் ஒன்பதாவது பீடமாக கணினி பீடம் கல்வி அமைச்சரால் பிரகடனப் படுத்தப்பட்டது. அதன் ஸ்தாபக பீடாதிபதியாப் பல்கலைக்கழக பேரவையால் தற்காலிகமாக நியமிக்கப் பட்டிருந்த தரவு அறிவியல் துறையின் தலைவர் பேராசிரியர் ச. வசந்தப்ரியன் கடந்த 03ஆம் திகதி முதல் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்குச் செயல்படும் வகையில்



பீட சபையால் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் - சுன்னாகத்தை சேர்ந்த பேராசிரியர் ச. வசந்தப்ரியன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 97ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவில் கல்வி கற்றவர். இவர் தனது கலாநிதி பட்டத்தை சீனாவின் வுஹான் தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்திலும் முதுகலை அறிவியல் பட்டத்தை எய்ந்தோவன் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திலும் கணினி விஞ்ஞானத்தில் இளமாணி சிறப்பு பட்டத்தை பேராதனை பல்கலைக்கழகழகத்திலும் பெற்றார்.

2005ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதல் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றி வரும் பேராசிரியர் ச. வசந்தப்ரியன், இளம் வயதில் கணினி பேராசிய ராக உயர்வடைந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

## பழுதடைந்த உணவு விற்ற உணவகத்துக்கு சீல் வைப்பு

யாழ்ப்பாணம், மே 13

பழுதடைந்த இறைச்சி கொத்து ரொட்டியை விற்பனை செய்த உணவகத்தை சீல் வைத்து மூட உத்தரவிட்டது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட ஆனைப்பந்தியில் அமைந்துள்ள பிரபல அசைவ உணவகத்தில் புதன்கிழமை மாலை ஒருவரால் வாங்கப்பட்ட கொத்து ரொட்டியில் இறைச்சி பழுதடைந்தமை தொடர்பில் பொது சுகாதார பரிசோதகருக்கு முறைப்பாடு கிடைத்தது.

இதனையடுத்து மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் பாலமுரளி தலைமையில் யாழ். மாநகர சபை பொது சுகாதார பரிசோதகர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை குறித்த கடையில் திடீர் பரிசோதனை மேற்கொண்டனர்.

இதன்போது மிகவும் பழுதடைந்த குளிர்சாதன பெட்டியில் சுகாதார சீர்கேடான முறையில் சமைத்த, சமைக்காத கோழி இறைச்சி, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி என சுமார் 45 கிலோ இறைச்சி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டதுடன் மேலும் பல குறைபாடுகள் இனங்காணப்பட்டன.

இதனையடுத்து நேற்று வெள்ளிக்கிழமை பொது சுகாதார பரிசோதகர் பு. ஆறுமுகதாசனால் நீதிவான் நீதிமன்றில் “பி” பத்திரத்தினூடாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் கடையை மறு அறிவித்தல் வரை மூடி சீல் வைக்குமாறும், கைப்பற்றப்பட்ட 45 கிலோ இறைச்சியை அழிக்குமாறும் பொது சுகாதார பரிசோதகருக்கு உத்தரவிட்டார். அத்துடன், வழக்கை எதிர் வரும் ஜூன் 28ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இதனையடுத்து குறித்த கடை சீல் வைக்கப்பட்டதுடன், கைப்பற்றப்பட்ட 45 கிலோ இறைச்சியும் பொது சுகாதார பரிசோதகரால் அழிக்கப்பட்டது. (ஐ)

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வவுனியாவில் வழங்கல்!

வவுனியா, மே 13

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று வவுனியா இலுப்பையடி பகுதியில் இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் கஞ்சியை பரிமாறி தமிழ் மக்கள் இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட அவலங்களை, அடுத்த தலைமுறையினருக்கு கடத்தும் நோக்குடன் இந்த செயல்பாடு பல தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முள்ளிவாய்க்கால் இனவழிப்பு படுகொலை வாரம் ஆரம்பமான நேற்றைய தினம் வவுனியா இலுப்பையடி முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (ஐ-07)

## நுங்கு திருட்டை தடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை!


யாழ்ப்பாணம், மே 13

யாழ்ப்பாணத்தில் நுங்கு திருட்டு அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது. இதனை கட்டுப்படுத்த உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காணி உரிமையாளர்கள் கோரியுள்ளனர்.

நுங்கு பருவ காலம் என்பதால் தற்போது யாழ்ப்பாணத்தில் நுங்குக்கு கடும் கிராக்கி காணப்படுகின்றது. இதனால் ஆட்கள் அற்ற தனியார் காணிகளுக்குள் உள்ள பனை மரங்களில் நுங்குகள் திருடப்படுகின்றன.

இதனால், காணி உரிமையாளர்களான பனங்காய் மற்றும் அதன் மூலமான உற்பத்திகளை நம்பியுள்ளவர்கள் இதனால் பாதிக்கப்படுகின்றனர். எனவே, நுங்கு திருட்டை தடுக்க உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**மே - 13 சனிக்கிழமை**
**சோபகிருது வருடம் - சித்திரை 30**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 07.30 - 09.00 |
| ராகு காலம் | : | 09.00 - 10.30 |
| திதி | : | நவமி |



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சியை அதிகாரி ஆதரிப்பார். மதிப்புக் கூடும் நாள்.

**இடபம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். மரியாதை கூடும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் பழைய கசப்பான சம்பவங்கள் நினைவுக்கு வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அலைக்கழிக்கப்படுவீர்கள். பொறுமை தேவைப்படும்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். மேலதிகாரிகள் ஒத்துழைப்பார்கள். தன்னம்பிக்கை பிறக்கும் நாள்.

**சிம்மம்**
சமயோசிதமாகவும் சாதுரியமாகவும் பேசி காரியம் சாதிப்பீர்கள். பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் ஆலோசனை ஏற்கப்படும். திடீர் யோகம் கிட்டும்.

**கன்னி**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். கடையை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகள் தேடி வரும். புதுமை படைக்கும் நாள்.

**துலாம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உதவிகள் கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் புதுயுக்திகளை கையாளுவீர்கள். உங்களின் உழைப்பிற்கு அதிகாரிகளால் பாராட்டு கிடைக்கும். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**தனுசு**
இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். புதிய பாதை தெரியும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வுமனப்பான்மை தலை தூக்கும். கனவாகப் பழகுங்கள். ஊழியர்களால் தொந்தரவுகள் வந்து நீங்கும். சகிப்புத் தன்மை தேவைப்படும்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வாகனம் தொந்தரவு தரும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரும். ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம்.

**மீனம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். எதிர்பார்த்த இடத்தில் இருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். எண்ணங்கள் நிறைவேறும் நாள்.

# 21 பேரின் சொத்து பட்டியலை ஜூலையில் வெளியிடுவேன்!

## பா. ஜ. க. அண்ணாமலை தெரிவிப்பு

சென்னை, மே 13

ஜூலை முதல் வாரத்தில் தி. மு. கவின் 21 பேர் அடங்கிய சொத்துப்பட்டியலின் 2ஆம் பாகம் வெளியிடப்படும் என தமிழக பாரதிய ஜனதா கட்சி தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தவை வருமாறு,

தி. மு. கவின் நாசரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கியதை பா. ஜ. க. வரவேற்கிறது. தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகளை புதிய அமைச்சர் நிறைவேற்றுவார் என நம்புகிறேன்.

அதிக அளவில் நிறுவனங்களை நடத்தி வரும் குடும்பம் என்பதால் டி. ஆர். பி. ராஜாவுக்கு தொழில்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா? டி. ஆர். பாலு என்மீது அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளது நகைப்புக்குரியது. இதனால் அவர்மீது நான் வைக்கும் குற்றச்சாட்டு ஒரு சதவீதம்கூட குறையாது, மேலும் அதிகமாகக் குற்றச்சாட்டை வைப்பேன். இதுவரை மொத்தம் ஆயிரத்து 461 கோடி (இந்திய) ரூபாய் நஷ்டஈடு கேட்டு என் மீது தி. மு. கவினர் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

பலமுறை முதல்வர் ஸ்டாலின் பாராட்டிய அமைச்சர் தியாகராஜனை தற்போது வேறு துறைக்கு மாற்றியதற்கான காரணம் என்ன? தவறு செய்தது தி. மு. கவின் குடும்பம், அதனைப் பற்றி பேசியதற்காக இவரை மாற்றுகின்றனர். முழு ஒலிப்பதிவு ஆதாரத்தையும் நான் நீதி மன்றத்தில் சமர்பிப்பேன். ஜூலை முதல் வாரத்தில் 21 பேர் அடங்கிய தி. மு. கவின் சொத்துப்பட்டியலின் 2ஆம் பாகத்தை வெளியிடுவேன் - என்றார். (ஐ)

# உதயநிதி துணை முதல்வர்? தி. மு. கவில் வலுக்கும் கோஷம்!

சென்னை, மே 13

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை துணை முதல்வராக்க வேண்டும் என்ற கோஷம் தி. மு. க. கட்சியில் அதிகமாகியுள்ளது.

துணை முதல்வர் உதயநிதி என்று கோஷத்துடன் அவருக்கு சாதகமாக சுவரொட்டி ஒட்டப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் அமைச்சர்கள் பதவியேற்பின்போதுகூட இளைஞர்களுக்கு அமைச்சர் பதவி வழங்குவது வரவேற்கக்கூடியது என்று வலியுறுத்தப்பட்டது. இதன்போதுகூட, துணைமுதல்வர் பதவியில் ஸ்டாலினை அமர்த்துவது குறித்து பேசப்பட்டது.

இதனிடையே, இந்தத் துணை முதல்வர் விவகாரம் குறித்து அ. தி. மு. க. கட்சியும் உதயநிதியை விமர்சிக்க ஆரம்பித்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

(ஐ)

# தி. மு. க. ஊழலை அம்பலப்படுத்த அண்ணாமலை பாத யாத்திரை!

சென்னை, மே 13

''தி.மு.க., அரசின் ஊழல்களை வெளிச்சம் போட்டு காட்டும் பாத யாத்திரை எதிர்வரும் ஜூலை 9இல் தொடங்கி டிசெம்பர் வரை நடத்தப்படும்,'' என்று தமிழக பா. ஜ. கட்சியின் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

கர்நாடகாவிலிருந்து நேற்று சென்னை திரும்பிய அவர்,

கர்நாடகாவில் ஆரம்பத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைக்கக்கூடிய அளவுக்கு போதுமான எண்ணிக்கையில் ஆசனங்களை பெறுவது கடினம் என ஆருடம் கூறினர். அதற்கான பிம்பத்தை கட்டமைத்தனர். ஆனால், பிரசாரத்துக்காக மாநிலம் முழுதும் சுற்றி வந்தபோது, அப்படியொரு நிலை களத்தில் இல்லை என்பதை உணர்ந்தேன்.

இதை கட்சி மேலிடத்தில் கூறியதும், தொண்டர்கள், தலைவர்கள் மத்தியில் உற்சாகம் கரைபுரண்டது. பிரதமர் மோடி, கர்நாடகாவில் கூடுதலாகவே பிரசாரம் செய்தார். இது, மக்கள் மத்தியில் பெரும் ஈர்ப்பை ஏற்படுத்தியது. நேர்மறையான விசயங்களை கூறியே ஓட்டு கேட்டோம். கர்நாடக தேர்தல் வேலைகளில் ஈடுபட்டது, புது விசயங்களை கற்று கொடுத்திருக்கிறது நல்ல அனுபவம் கிடைத்துள்ளது.

இனி, தமிழக அரசியல்தான் முக்கியம். எதிர்வரும் ஜூலை 9இல் தொடங்கும், 'என் மண் என் மக்கள்' என்ற இந்தப் பாத யாத்திரை டிசெம்பரில் முடியும். பாதயாத்திரையின் போது, தமிழக அரசு மற்றும் அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட ஊழல்கள் தொடர்ச்சியாக அம்பலப்படுத்தப்படும். இந்த பாதயாத்திரை வாயிலாக, அனைத்து மாவட்ட மக்களையும் சந்திக்க இருக்கிறேன் - என்றார்.

(ஐ)

# தமிழா சமஸ்கிருதமா பழமையான மொழி? விவாதம் எழுப்பும் விதத்தில் ஆளுநர் பேச்சு

சென்னை, மே 13

பழமையான மொழி தமிழா? சமஸ்கிருதமா என்ற விவாதத்தை மீண்டும் எழுப்பும்விதமாக தமிழக ஆளுநர் ஆர். என். ரவி கருத்து வெளியிட்டுள்ளார்.

ஆளுநர் மாளிகையில் "ஒரே பாரதம், உன்னத பாரதம்" என்ற நிகழ்ச்சி நேற்று நடந்தது.

இதில் பங்கேற்று பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவி,

பாரத நாடு என்பது கலாசாரம் மற்றும் நாகரிக வளர்ச்சியால் உருவானது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அது உருவாகி விட்டது. பாரதம் என்பது 1947ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதாக பலர் நினைத்துக் கொண்டிருப்பார்கள். அது தவறாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாரதம் உருவாகி விட்டது.

தமிழ் மொழியையும், சமஸ்கிருத மொழியையும் பழமையான மொழிகள் என்று கூறுவார்கள். ஆனால் இதில் எது பழமையான மொழி என்பதற்கு தற்போது விடையும் முடிவும் கிடைக்காமலேயே உள்ளது. இதன் மூலம் பழமையான மொழி சமஸ்கிருதமா? இல்லை தமிழா? என்கிற விவாதம் நீண்டு கொண்டே செல்கிறது.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ராஜாக்கள் ஆண்ட காலத்தில் இருந்தே யார் வேண்டுமானாலும் எங்கும் செல்லலாம் என்கிற சூழல் இருந்து வந்துள்ளது. அந்த வகையில் தமிழ் மொழியில் இருந்து சமஸ்கிருதத்துக்கு பல சொற்கள் வந்துள்ளன. அதே போல சமஸ்கிருதத்தில் இருந்து தமிழுக்கும் பல்வேறு சொற்கள் வந்துள்ளன.

அண்மையில், ஆளுநர் ரவி தமிழ்நாடு என்று சொல்வதைவிட தமிழகம் என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும் என்று கூறினார். இது பெரும் சர்ச்சையாக உருவெடுத்தது. இந்த நிலையிலேயே, பழமையான மொழி சமஸ்கிருதமா? தமிழா? என்ற ரீதியில் கருத்துக்களை தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# கண் மருந்தால் பாதிக்கப்பட்டோர் அரசிடம் இழப்பீடு கோருகின்றனர்!

கொழும்பு, மே. 13

மூன்று அரசு மருத்துவமனைகளில் கண்புரை அறுவைச் சிகிச்சைக்கு பயன்படுத்திய 'ப்ரெட்னி சோலோன்' என்ற கண் சொட்டு மருந்தைப் பயன்படுத்தியதால், கண் பார்வையில் பாதிப்பை எதிர்கொண்டுள்ள பல நோயாளிகள், தங்கள் கண்களுக்கு ஏற்பட்ட சேதத்துக்கும் தங்கள் உயிருக்கு சாத்தியமான அச்சுறுத்தலுக்கும் நிதி இழப்பீடு கோருகின்றனர்.

பாதிக்கப்பட்டர்களில் ஒருவரான 67 வயதுடைய பி.ஏ.நந்தசேன பண்டாரவளையைச் சேர்ந்தவர். இவர் அண்மையில் நுவரெலியா பொது வைத்திய சாலையில் கண் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

"ஏப்ரல் 04 ஆம் திகதி நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மறுநாள் குறித்த மருந்து பயன்படுத்தப்பட்டு, கண்புரை அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டேன். பின்னர், நான் ஏப்ரல் 06 அன்று வீடு திரும்பினேன்".

சுமார் 14 நாட்களுக்குப் பிறகு சிக்கல்கள் தோன்றத் தொடங்கின. சத்திர சிகிச்சை செய்யப்பட்ட கண்ணின் மேல் சிலந்தி வலை இருப்பது போல் இருக்கிறது. படிப்படியாக பார்வையை இழக்க ஆரம்பித்தேன். இதனால் மன உளைச்சலுக்கு ஆளான நான், ஆலோசனை பெறுவதற்காக வைத்தியசாலைக்குச் சென்றேன், மீண்டும் என்னை வைத்திய சாலையில் அனுமதிக்குமாறு கூறினேன்.

இதையடுத்து, நான் உட்பட ஐந்து நோயாளிகள் கொழும்பில் உள்ள தேசிய கண் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டோம். அங்கு எனது கண்ணுக்கு பல சிகிச்சைகள் செய்யப்பட்டன. இது மிகவும் வேதனையாக இருந்தது-என்றார் பி.ஏ.நந்தசேன.



எம்.ராஜரத்தினம் என்ற மற்றொரு பாதிக்கப்பட்டவர் தனது அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டு, தங்களைப் போன்ற ஏழைகளுக்கு இது நடந்தது உண்மையில் துரதிர்ஷ்டவசமானது என்று கூறினார்.

"இது இப்போது எங்கள் வாழ்க்கைக்கு கூடுதல் சுமை" என்று அவர் புலம்பினார்.

"எங்களுக்கு நடந்ததற்கு இழப்பீடு வேண்டும். எங்கள் வாழ்க்கை இப்போது ஆபத்தில் உள்ளது. எங்களுக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. தவறு அரசாங்கத்தின் மீதுதான். எனவே, நிதி இழப்பீடு கோருகிறோம்,"-என்றார் அவர். (அ)

# வெள்ள அபாயம் இல்லை

கொழும்பு, மே. 13

மேல் மற்றும் தென் மாகாணங்களில் 100 மில்லிமீற்றர் கனமழை பெய்து வருவதால், களுகங்கை, களனி கங்கை, ஜின் கங்கை மற்றும் நில்வலா கங்கையின் நீர் மட்டங்களில் கணிசமான அளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளபோதிலும் வெள்ள அபாய எச்சரிக்கைகள் எதுவும் இல்லை என நீர்ப்பாசன பணிப்பாளர் எஸ்.பி.சி. சுகீஸ்வர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஆனால் இந்த ஆறுகளின் கீழ்ப் பகுதிகளில் தற்போது நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

இருப்பினும் இந்த ஆறுகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் போதிய மழை பெய்துள்ளது. அதிக மழை பெய்தால், நீர்பிடிப்பு பகுதிகளில் 100 மி.மீ.க்கு மேல் மழை பெய்தால், வெள்ளம் ஏற்படும் அபாயம் உள்ளது.

எனவே பெய்த மழையினால் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய சாத்தியமுள்ள ஆறுகளை பயன்படுத்தும் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும். பிரதான ஆறுகளுடன் இணைக்கப்பட்டுள்ள நீரோடைகளைப் பயன்படுத்தும்போது கீழ்ப்பு றங்களில் வசிப்பவர்கள் மற்றும் பயன்படுத்துபவர்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்-என்றார்.

# 22 வயது யுவதி மாயம்!

கொழும்பு, மே. 13

கம்பளையில் 22 வயதுடைய யுவதி ஒருவர் கடந்த ஐந்து நாட்களுக்கு முன்னர் காணாமல்போயுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பாத்திமா முனவ்வரா என்ற குறித்த பெண் கம்பளை-வெலிகல்ல பிரதேசத்தில் வசிப்பதோடு கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் காணாமல்போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் அப் பிரதேசத்தில் உள்ள மருந்தகம் ஒன்றில் பணிபுரிந்து வந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, எல்பிட்டிய பள்ளிவாசலில் இருந்து பெறப்பட்ட சி.சி.ரி.வி காட்சிகளின் படி, வெலிகல்ல நகரை நோக்கிச் சென்ற பின்னர் அவர் காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து அவரைத் தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# பிரித்தானிய யுவதியின் மனு மன்றினால் தள்ளுபடி

## ரூ.500,000 செலுத்த உத்தரவு

கொழும்பு, மே. 13

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் தனது வதிவிட விசாவை ரத்து செய்ததை எதிர்த்து, பிரித்தானிய பிரஜையான கெய்லி பிரேசர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை, உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சட்டக் கட்டணமாக ரூ.500,000 செலுத்தவும் உத்தரவிடப்பட்டது.

எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த பூர்வாங்க ஆட்சேபனைகளை கருத்தில் கொண்டு உயர்நீதிமன்றம் இந்த முடிவை எடுத்துள்ளது.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.துரைராஜா மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் நீதிபதி முர்து பெர்னாண்டோ இந்த வழக்கின் தீர்ப்பை திறந்த நீதிமன்றத்தில் அறிவித்தார்.

வதிவிட விசாவில் இந்த நாட்டில் தங்கியிருந்த மனுதாரர் போராட்டத்தில் ஈடுபட்டதாக சமூக வலைத்தளங்களிலும் ஏனைய ஊடகங்களிலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

நாட்டில் தங்குவதற்கு விசா வழங்கப்பட்டாலும், ஓகஸ்ட் 10, 2022 அன்று குடிவரவுக் கட்டுப்பாட்டாளர் அதை ரத்து செய்ய முடிவு செய்தார். பின்னர் ஒகஸ்ட் 15, 2022 இற்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேறுமாறு அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

பிரித்தானிய பெண் இந்த அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தார். குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் உட்பட மூவர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (அ)

# இலங்கையில் 10 நாட்களில் 59 பேரைக் காணவில்லை!

கொழும்பு, மே. 13

மே மாதம் முதல் 10 நாட்களில் 59 பேர் காணாமல் போனதாக பொலிஸ் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. காணாமல் போனவர்களில் 17 சிறார்களும் உள்ளதாக பொலிஸாரின் தரவுகளின் பகுப்பாய்வில் தெரியவந்துள்ளது.

இந்த காலகட்டத்தில், காணாமல்போன சிறார்களில் அதிகமானவர்கள் சிறுமிகள். 13 சிறுமிகள் காணாமல்போயுள்ளனர். சிறுவர்கள் 4 பேர் காணாமல் போயுள்ளனர்.

காணாமல்போன சிறார்களில் இரண்டு பிக்குணிகளும் ஒரு புதிய பிக்கும் உள்ளனர்.

பெரியவர்களில், 17 பெண்களும் 25 ஆண்களும் காணாமல் போயுள்ளனர். காணாமல்போன பெரும்பாலான பெண்களில் அநேகமானவர்கள் யுவதிகள், சிறுமிகள் மற்றும் வீட்டை விட்டு காதலனுடன் ஓடியவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதுமட்டுமின்றி, பெற்றோர் மற்றும் பெரியவர்களுடன் கருத்து மோதல்கள் காரணமாக சில குழந்தைகள் வீட்டை விட்டு ஓடிவிடுவதுடன், அவர்கள் காணாமல்போனவர்களாகவும் புகார் அளிக்கப்படுவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# களுத்துறை யுவதி கொலை வழக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம்!

கொழும்பு, மே. 13

களுத்துறை யுவதி உயிரிழந்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிரதான சந்தேக நபரை மே மாதம் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு களுத்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதேவேளை, யுவதியின் மரணம் தொடர்பான விசாரணைகளில் அவர் தங்கியிருந்த விடுதி உரிமையாளரின் மனைவியும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட நிலையில் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைகளின்போது, உயிரிழந்த யுவதிக்கு ஆசிரியர் ஒருவரிடமிருந்து கடைசி தொலைபேசி அழைப்பு வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அதன்படி பிரதான சந்தேக நபரிடம் வாக்குமூலம் பதிவு செய்யத பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி வைத்தியசாலையில் சர்வதேச தாதியர் தின நிகழ்வுகள்



கிளிநொச்சி, மே. 13

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலை தாதியர்கள் ஏற்பாட்டில் தாதியர் தின நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

மாவட்ட பொது வைத்திய சாலையில் கடமையாற்றி யுத்த நிலைமையின்போது உயிரிழந்த தாதியரின் திருவுருவப்படத்துக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து தாதியர்களின் சத்தியப்பிரமாணம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தாதியர் கல்லூரியின் ஓய்வுபெற்ற பணிப்பாளர் ராயூலாதேவி வல்லிபுரநாதன், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் எஸ். சுகந்தன், வைத்தியர்கள், தாதியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# சாவகச்சேரியில் ஊர் மக்கள் போராடி வீதியை மீட்டனர்!





யாழ்ப்பாணம், மே. 13

சாவகச்சேரி பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியை தனியார் ஒருவரிடம் இருந்து மீட்டு மக்களின் பாவனைக்கு வழங்குமாறு அக்கிராம மக்கள் சாவகச்சேரி பிரதேச சபை தலைமைக் காரியலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று காலை 6.00 மணி முதல் பிரதேச சபையின் பிரதான வாயிலை மறித்து அவ்வீதியை பயன்படுத்தும் மக்கள், பாடசாலை மாணவர்கள், முன்னாள் உபதவிசாளர் செ.மயூரன், முன்னாள் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் திலகராணி உட்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பொதுமக்கள் பயன்படுத்தும் சாவகச்சேரி பிரதேச சபைக்கு சொந்தமான தாவளை இயற்றாலை ஊறெல்லை வீதியையும் கமநல சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான குளத்தையும் அபகரித்து தனியார் ஒருவர் அடாத்தாக எல்லை வேலி அமைத்து கிராம மக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக குறித்த வீதியை அபகரித்துள்ளார்.

இது தொடர்பாக அந்த கிராம மக்கள் 2020 ஆம் ஆண்டு சாவகச்சேரி சாவகச்சேரி பிரதேச சபை, கமநல சேவைகள் திணைகளம் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகம் என்பவற்றில் முறைப்பாடு செய்திருந்தனர். இதனை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட திணைக்களங்கள் அவர்களுடைய ஆவணங்களின் அடிப்படையில் கமநல சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான குளத்தின் அரைவாசிப் பகுதியும் சாவகச்சேரி பிரதேச சபைக்குச் சொந்தமான 100 மீற்றர் வரையான வீதியும் குறித்த தனி நபரால் எல்லையிடப்பட்டு அபகரிக்கப்பட்டதைக் கண்டறிந்தனர்.

இதையடுத்து சாவகச்சேரி பிரதேச சபை குறித்த வீதியைக் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசெம்பரில் மக்கள் பாவனைக்காக எல்லையிட்டு திறந்து விட்டிருந்தனர். ஆனால் வீதி திறந்துவிட்ட சில நாள்களிலேயே குறித்த தனிநபரால் மீண்டும் அந்த வீதியும் குளமும் முள்கம்பி வேலியிட்டு அடைக்கப்பட்டது. இதனால் மக்களும் மாணவர்களும் குளத்தினூடாகவே பயணம் செய்ய வேண்டிய அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் குறித்த வீதியை மீட்டுத் தருமாறு பிரதேச சபையிடம் பல தடவை முறையிட்டும் தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் நேற்றுக் காலை பிரதேச சபையை முற்றிகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் குறித்த இடத்துக்கு வருகை தந்த கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எச்.கீ.ரணசிங்க மற்றும் சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் க.சந்திரகுமார் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களோடு கலந்துரையாடினார்கள்.

இதன்போது குறித்த வீதியை உடனடியாக மக்கள் பயன்படுத்தக்கூடியதாக மீட்டுத் தந்தால் மட்டுமே அங்கிருந்து கலைந்து செல்வோம் என உறுதியாக தெரிவித்தனர்.

இதன்போது, குறித்த வீதியை சுற்றியுள்ள அடைக்கப்பட்டுள்ள முட்கம்பி வேலிகளை உடனடியாக அகற்றுவதற்கு பொலிஸார் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம் என கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எச்.கீ.ரணசிங்க தெரிவித்தார்.

இதையடுத்து பிரதேச சபை செயலாளர் உட்பட்ட அதிகாரிகள், கொடிகாமம் பொலிஸார், சாவகச்சேரி பிரதேச செயலர், கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் போராட்டத்தில் ஈடுபட்ட கிராம மக்கள் உள்ளிட்டவர்கள் தனியாரால் அபகரிக்கப்பட்ட தாவளை இயற்றாலை ஊறெல்லை வீதிக்குச் சென்றனர்.

பொலிஸாரின் பாதுகாப்போடு வீதியை அபகரித்து போடப்பட்டிருந்த சுமார் 100 மீற்றருக்கும் அதிகமான முட்கம்பி வேலிகளையும் தூண்களையும் அகற்றி அளவீடு செய்து பொதுமக்களின் பாவனைக்காக திறந்து விட்டனர். இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கலைந்து சென்றனர். (அ)

# மொட்டுக் கட்சியின் குரூரத் தன அரசியலுக்கு முடிவு கட்டுவோம்!

## சஜித் பிரேமதாஸ அறிவிப்பு

கொழும்பு, மே. 13

**குரூரத்தனமும், குண்டர்த்தனமும் நிறைந்த மக்கள் ஆணை இல்லாத இந்த அரசில் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் நடப்பது வருத்தமளிக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



மொட்டுக் கட்சியின் அரசியல் தலைவர்களில் ஒருவரான கடுவலை முன்னாள் பிரதி மேயர் சந்திக்க அபேரத்ன மேற்கொண்ட தாக்குதலில் காயமடைந்த சமூக ஆர்வலரும் கடற்படைப் பொறியியலாளருமான பியத் நிகேஷலவின் உடல் நிலை குறித்து கேட்டறிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுக் காலை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார்.

இதன்போதே ஊடகங்களிடம் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மொட்டின் குண்டர்களால் மேலும் தாக்கப்படவுள்ள இளைஞர்கள் என்ற பெயர்ப்பட்டியல் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது. எனவே, இனிவரும் காலங்களில் அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர்கள் மீது அட்டூழியங்கள் நடந்தால் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி ஆட்சிக்கு வந்த பிறகு, இது போன்ற கொடூரமான குண்டர்த்தன அரசியலைச் செயற்படுத்தும் அனைவருக்கும் தகுதி தராதரம் பாராது அவர்களுக்கு எதிராக எடுக்கக்கூடிய அனைத்து சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படும். கடுமையான தண்டனை வழங்கப்படும். தற்போதைய அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி தாம் விரும்பியவாறு செயற்படலாம் என மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் நினைத்தால் அது தவறு.

அரசியல் பழிவாங்கல்களை நாம் அங்கீகரிக்கவில்லை என்றாலும், இது போன்ற சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் அனைவருக்கும் அந்தஸ்து பாராமல் நாட்டின் சட்டத்தின் பிரகாரம் தண்டனை வழங்கப்படும். இவ்வாறான கோழைத்தனமான செயற்பாடுகளை ஒரு போதும் அங்கீகரிக்க முடியாது -என்றார். (அ)

# சட்டவிரோதமாக மாடுகள் கடத்தியவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் பலி!

கொழும்பு, மே. 13

சட்டவிரோதமான முறையில் கால்நடைகளை ஏற்றிச் சென்ற பாரவூர்தி மீது எம்பிலிபிட்டிய பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் அந்த வாகனத்தில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய - மஹாபலஸ்ஸ பகுதியில் இரவு நேர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேகத்திற்கிடமாக பயணித்த பாரவூர்தியொன்றை நிறுத்துமாறு உத்தரவிட்டனர்.

இந்த உத்தரவை மீறிய பாரவூர்திச் சாரதி, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில், வாகனம் செலுத்தியபோது, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டுக்கு மத்தியில் தப்பிச்சென்ற சந்தேகநபர்கள் பாரவூர்தியிலிருந்த மாடுகளைக் காட்டுப் பகுதியில் விடுவித்து, வீரகட்டிய பகுதிக்கு தப்பிச் சென்றுள்ளனர்.

அதன்போது, பொலிஸார் அவர்களை சுற்றிவளைத்தனர். சம்பவத்தில் பாரவூர்தியில் இருந்த ஒருவர் காயமடைந்த நிலையில் அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

எனினும், அவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முன்னதாகவே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாரவூர்தியிலிருந்த மேலும் மூவரை பொலிஸார் கைது செய்ததுடன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்த பசுவொன்றை கால்நடை மருத்துவரிடம் சிகிச்சைக்காக அனுப்பி வைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

இதேவேளை, பாரவூர்தியை துரத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்களின் வாகனத்துக்கு இடையூறு ஏற்படுத்திய கார் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

# வர்த்தக நிலையமொன்றில் இந்திய முட்டைகள் சிக்கின!

கொழும்பு, மே. 13

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகை முட்டைகள் மாத்தறை - வல்கம பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய, நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரிகள் மற்றும் சுகாதாரப் பிரிவின் உணவு கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளினால் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர்கள் கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களத்துக்கு அறியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரச வணிகக் கூட்டுத்தாபனத்தினால், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை, வெதுப்பக உற்பத்திகளுக்காக மாத்திரம் வழங்குவதற்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் அனுமதி வழங்கி இருந்தது.

இந்த நிலையில், மாத்தறை பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் மீட்கப்பட்டுள்ளன. (அ)

# தமிழருக்கு எதிராக நடந்தது இனப்படுகொலையென அங்கீகரிக்குமாறு பிரிட்டனை வலியுறுத்த பிரசாரம்!

லண்டன், மே. 13

இலங்கையில் இடம்பெற்றது, தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை என்பதை அங்கீகரிக்குமாறு, பிரித்தானிய அரசை வலியுறுத்த, இனப்படுகொலை தடுப்பு மற்றும் வழக்கு விசாரணைக்கான சர்வதேச மையம் மற்றும் தமிழ் இனப்படுகொலை நினைவுச்சின்னம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து சர்வதேச பிரசாரத்தை ஆரம்பித்துள்ளன.

உலகத் தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பு மற்றும் ஒட்டாவா தமிழ்ச் சங்கம் என்பனவும் இந்த பிரசாரத்தில் இணைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும் பல அமைப்புகள் இந்த பிரசாரத்தில் இணையும் என எதிர்பார்க்கப்படுகிறது.




இந்நிலையில் 750 இற்கும் மேற்பட்ட கையெழுத்துகளுடன் கூடிய மனுவின் முதற்கட்ட நகல் பிரித்தானிய பிரதமருக்கு அனுப்பப்பட்டு இந்த கையெழுத்து இயக்கம் தொடரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மக்களை வேண்டுமென்றே ஏழைகளாக்கிய ஆளும்கட்சி

## கபீர் ஹாசிம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 13

**பொதுஜன பெரமுன கடந்த காலங்களில் மக்களை வேண்டுமென்றே ஏழைகளாக்கியுள் ளதாக ஐக்கிய மக்கள் சக்தி யின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் குற்றம் சாட்டியுள்ளார்.**

நலன்புரிக் கொடுப்பனவுகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே கபீர் ஹாசிம் மேற்கண்டவாறு கூறினார்.

2019 ஆம் ஆண்டில் 11 வீதமாக ஆக இருந்த வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை 25 வீதமாக உயர்ந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதேநேரம் அவர்களின் மீட்சிக்காக மிகக் குறைந்த மானியங்களையே அரசாங்கம் வழங்குவதாகவும் கபீர் ஹாஷிம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் முகாமைத்துவமில்லாத நடவடிக்கையினால் இலங்கையில் சுமார் 55 இலட்சம் ஏழைகள் இருப்பதாகவும் கபீர் ஹாசிம் குறிப்பிட்டார்.

(அ)



# ஒவ்வொரு நாளும் ஒரு யானை பலி!

## மனிதசெயல்பாடுகளே காரணம்!

கொழும்பு, மே. 13

இலங்கையில் இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் சராசரியாக ஒவ்வொரு நாளும் ஒரு யானை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றில், அரைவாசிக்கும் மேற்பட்ட இறப்புக்கள் மனித காரணங்களினால் ஏற்பட்டவையாகும்.

எனவே, அழிந்து வரும் யானைகளை காப்பாற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்கள தகவல்படி, இந்த வருடத்தின் மூன்று மாதங்களில் 151 யானைகள் இறந்துள்ளன.

அவற்றில், குறைந்தது 67 இறப்புக்கள், மனித தலையீட்டின் காரணமாக ஏற்பட்டவை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு யானை இறப்புகள் 433 ஆக இருந்தது.

அதேநேரம், யானைகளின் தாக்கங்களால் 145 மனித உயிரிழப்புகள் பதிவாகியிருந்தன.

(அ)

# பிரச்னை தீர்க்கப்படாவிடின் ஒரு வார பணிப்புறக்கணிப்பு

## ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் எச்சரிக்கை!

கொழும்பு, மே. 13

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள கூட்டத்தில், விடயத்துடன் தொடர்புடைய அமைச்சரினால் தமது பிரச்னைகளுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்படாவிட்டால், ஒரு வாரகால பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எவ்வாறாயினும், குறித்த கலந்துரையாடலின்போது பயனுள்ள தீர்வு வழங்கப்படும் என தொழிற்சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட 24 மணி நேர பணிப்புறக்கணிப்புப் போராட்டம், வெற்றியடைந்ததாக குறிப்பிட்ட அவர், அமைச்சின் செயலாளர் இந்த விவகாரத்தில் இப்போதாவது தலையிட்டு, ரயில்வே பொது முகாமையாளருக்கு ஆலோசனை வழங்குவார் என்றும் குறிப்பிட்டார்.

(அ)

# நுளம்பு குடம்பி பெருக்கம் சடுதியாக உயர்வடைந்தது

கொழும்பு, மே. 13

மேல் மாகாணம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் நுளம்பு குடம்பிகளின் பெருக்கம் சடுதியாக அதிகரித்துள்ளதென பூச்சியியல் அதிகாரிகள் சங்கம் தெரிவிக்கின்றது.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் மூலம் இந்த விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக பூச்சியியல் அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நஜித் சுமனசேன கூறினார்.

சில பகுதிகளில் 50 பீட்டா அலகுகளிலும் ஏனைய பகுதிகளில் 20 பீட்டா அலகுகளிலும் நுளம்பு குடம்பிகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நோய்கள் பரவாதிருக்க நுளம்பு குடம்பிகள் 05 பீட்டா அளவில் காணப்பட வேண்டும் என பூச்சியியல் அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மட்டக்களப்பு, மாத்தளை, கண்டி, காலி உள்ளிட்ட பகுதிகளிலும் நுளம்பு குடம்பிகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

மேல் மாகாணம் உள்ளிட்ட பல இடங்களில் முன்னெடுக்கப்படும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் இலக்கு உரிய முறையில் எட்டப்படவில்லை என பூச்சியியல் அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 30,000 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன் அவர்களில் 50 வீதமானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

டெங்குவை கட்டுப்படுத்துவதில் பொதுமக்களுக்கு பாரிய பொறுப்பு உள்ளதென வலியுறுத்தும் சுகாதார தரப்பினர் சுற்றுச் சூழலை சுத்தமாக பேணுவதனூடாக டெங்கு நுளம்பு பெருக்கத்தை தடுக்க முடியும் என அறிவுறுத்தியுள்ளனர்.

(அ)

# உயர்தர விடைத்தாள்கள் மதிப்பீட்டை அடுத்த மாதத்துக்குள் முடிக்க திட்டம்

கொழும்பு, மே. 13

உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியை அடுத்த மாதத்திற்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரண்டு பாடங்களுக்கான விடைத்தாள்களின் மதிப்பீடு நிறைவடைந்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மேலும் ஆறு பாடங்களின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணி தொடங்கியுள்ளது. மற்ற பாடங்களின் விடைத்தாள் மதிப்பீடு அடுத்த வாரம் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 10 மையங்களில் இந்த நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் மே மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை காலத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் உயர்தர மதிப்பீடுகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலை கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஆசிரியர்களை அதற்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விடைத்தாள் மதிப்பீட்டின் போது நடைமுறைப் பரீட்சைகளுக்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும்-என்றார்.

(அ)

# கூலர் ரக வாகனத்தில் மீட்கப்பட்ட 54 ஆடுகள்



வவுனியா, மே. 13

வவுனியாவில் விதிமுறைகளை மீறி ஆடுகளை 54 ஆடுகளை கூலர் ரக வாகனத்தில் ஏற்றிச்சென்ற சந்தேக நபரை பொலிஸார் நேற்று முன் தினம் இரவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கல்கிஸைக்கு விதிமுறைகளை மீறி ஆடுகள் ஏற்றிச்செல்வதாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ். ஜெயக்கொடிக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பதில் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜெயதிலக தலைமையிலான குழுவினர் தாண்டிக்குளம் பகுதியில் குறித்த வாகனத்தை மறித்து சோதனைக்குட்படுத்தினர்.

இதன்போது விதிமுறைகளை மீறி 54 ஆடுகள் குறித்த கூலர் ரக வாகனத்தில் இருந்தமை உறுதி செய்யப்பட்டமையையடுத்து வாகனத்தை வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்ற பொலிஸார், வாகனச் சாரதியான 42 வயதுடைய நபரை பொலிஸார் கைது செய்தனர்.

(அ)

# ஊழல் எதிர்ப்பு சமரில் ஜனாதிபதி ஈடுபடாதமை கவலையளிக்கிறது

## ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மே. 13

ஊழல், மோசடி தடுப்பு நடவடிக்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னும் ஈடுபடாமை கவலையளிக்கின்றது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

வெளிநாடு சென்றிருந்த ரஞ்சன் ராமநாயக்க நேற்று காலை நாடு திரும்பினார். அதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

"எரிபொருள் வரிசை, எரிவாயு வரிசையென வரிசை யுகத்துக்கு ஜனாதிபதி முடிவு கட்டியதை வரவேற்கின்றேன். நாடு வழமைக்கு திரும்பிவருகின்றது. ஐஎம்எப் கடன் கிடைத்தமை குறித்தும் மகிழ்ச்சி.

ஆனால் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையில் ஜனாதிபதி ஈடுபடவில்லை. கப்பத்துக்காக முதலீட்டாளர்கள் தாக்கப்படுகின்றனர். மத்திய வங்கி மோசடியில் ஈடுபட்ட அர்ஜுன் மகேந்திரனை நாட்டுக்கு கொண்டுவரவில்லை. எனவே, ஜனாதிபதி ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டால் மாற்றத்தை ஏற்படுத்தலாம். அவர் அது பற்றி கதைக்காதது கவலையளிக்கின்றது."

எனவும் குறிப்பிட்டார்.

(அ)

# தமிழகத்தில் அமைச்சரவை மாற்றம்: பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜனிடமிருந்து நிதித்துறை பறிப்பு - பின்னணி என்ன?

தமிழக அமைச்சரவை சில மாதங்களுக்குப் பிறகு மீண்டும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. முதல் முறையாக அமைச்சர் பதவியிலிருந்து ஒருவர் நீக்கப்பட்டிருக்கிறார். நிதித் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், அந்தப் பொறுப்பிலிருந்து மாற்றப்பட்டுள்ளார்.

அமைச்சரவை மாற்றம் தொடர்பான பட்டியல் வெளியானதும் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் தனது ட்விட்டர் பக்கத்தில் ஒரு பதிவை வெளியிட்டுள்ளார்.

அதில், "கடந்த இரண்டு ஆண்டுகள் நிதித்துறை பொறுப்பு வழங்கியதற்காகவும், தற்பொழுது எழுச்சிமிக்க புதிய பொறுப்பை வழங்கி மக்களுக்காகப் பணியாற்றும் வாய்ப்பை அளித்துள்ள என் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

**புதிய மாற்றங்கள் என்னென்ன?**

தமிழ்நாட்டு அமைச்சரவையின் புதிய அமைச்சராக பதவியேற்றுள்ளார் டி.ஆர்.பி. ராஜா. தற்போதைய அமைச்சரவையில் பால்வளத் துறை அமைச்சராக இருந்த ஆவடி நாசர், அந்தப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் தமிழ்நாடு அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கை மாற்றமின்றி 35 ஆக நீடிக்கிறது.

இருந்தாலும், அமைச்சரவையில் பல முக்கியமான மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழக நிதியமைச்சராக இருந்த பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், தகவல் மற்றும் தொழில்நுட்பத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தொழில்துறை அமைச்சரான தங்கம் தென்னரசு நிதியமைச்சராக பதவியேற்றுள்ளார். புதிதாக அமைச்சரவையில் இணையும் டி.ஆர்.பி. ராஜா, தொழில்துறை அமைச்சராக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே தகவல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சராக இருந்த மனோ தங்கராஜ், பால் வளத்துறை அமைச்சராக்கப்பட்டுள்ளார்.



செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சரான வெள்ளகோவில் சாமிநாதனுக்கு தமிழ் வளர்ச்சித்துறை கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சராக இருந்த பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் பேசியதாகக் கூறப்படும் ஓடியோ ஒன்று சில நாட்களுக்கு முன்பாக வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அந்த ஓடியோவில் முதலமைச்சரின் மகனும் அமைச்சருமான உதயநிதி குறித்தும் மருமகன் குறித்தும் அவர் பேசியவை, கட்சிக்குள் பெரும் புயலையே ஏற்படுத்தின. இந்தப் பின்னணியில்தான் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், அவர் வகித்துவந்த முக்கியத் துறையிலிருந்து மாற்றப்பட்டுள்ளார்.

**யார் இந்த பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன்?**

நீதிக் கட்சியின் தலைவரும் சென்னை மாகாணத்தின் முன்னாள் பிரதமர் பி.டி. ராஜனின் பேரனும் முன்னாள் அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜனின் மகனுமான பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், தன் தந்தையின் மரணத்திற்குப் பிறகு அரசியலுக்குக் கொண்டுவரப்பட்டார்.

2006ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது, பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரானார். ஆனால், பதவியேற்று மதுரைக்குத் திரும்பும் வழியிலேயே அவர் மரணமடைந்தார். அந்தத் தருணத்திலேயே அவரது மகன் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜனை அவரது தந்தையின் தொகுதியான மதுரை மத்தியத் தொகுதியில் போட்டியிடும்படி தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி வலியுறுத்தினார். ஆனால், அந்த சமயத்தில் அவர் அதனை ஏற்கவில்லை.

இதற்குப் பிறகு 2016ல் அமெரிக்காவிலிருந்து திரும்பிய பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மதுரை மத்தியத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். பிறகு, மீண்டும் 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும்





மதுரை மத்தியத் தொகுதியில் போட்டியிட்ட பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், அதில் வெற்றிபெற்றார். தி.மு.கவின் அமைச்சரவையில் நிதியமைச்சர் என்ற முக்கியப் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டது.

பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் நிதித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றபோது, மிக மோசமான நிலையில் இருந்த நிதித்துறையை மேம்படுத்த அவர் எடுத்த நடவடிக்கைகள் மிகுந்த கவனத்தைப் பெற்றன. பாராட்டுதல்களையும் பெற்றன. ஆனால், அதே நேரம் அரசின் பல்வேறு துறைகளுக்கு அவர் நிதியை விடுவிப்பதில் தாமதம் செய்வதாகவும் புகார்கள் எழுந்தன.

மற்றொரு பக்கம், தேசிய அளவில் தி.மு.கவின் முகத்தை மாற்றியமைப்பதிலும் அவர் முக்கியப் பங்கு வகித்தார். ஆங்கில ஊடகங்களுக்கு அவர் அளித்த பேட்டிகள், தொலைக்காட்சி விவாதங்களில் அவர் பங்கேற்று முன்வைத்த கருத்துகள் ஆகியவை நாடு முழுவதும் வெகுவாகக் கவனிக்கப்பட்டன.

தி.மு.கவின் ஐடிவிங்கை தீவிரமாகச் செயல்படவைக்க முடிவுசெய்யப்பட்டபோது, அதன் செயலராக பி.டி.ஆர்.



நியமிக்கப்பட்டார். தி.மு.க. ஐ.டி. விங்கின் கட்டமைப்பை முழுமையாக உருவாக்கியதிலும் கட்சிக் கட்டமைப்பு குறித்த தரவுகளை ஒழுங்குபடுத்தியதிலும் அவரது பங்களிப்பு முக்கியமானதாக இருந்தது.

இந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத்தொடரின்போது தமிழ்நாடு ஆளுநர் மாளிகையின் செலவுகளில் முறைகேடு இருப்பதாகக் கூறி அவர் வெளியிட்ட விவரங்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. ஆனால், முதலமைச்சர் குடும்பம் குறித்து தனிப்பட்ட முறையில் அவர் பேசியதாகக் கூறப்படும் ஓடியோ வெளியானது, அவர் பற்றிய நேர்மறை பிம்பம் அனைத்தையும் மாற்றியமைத்தது.

**நாசர் நீக்கப்பட்டது ஏன்?**

பால் வளத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசரைப் பொறுத்தவரை, அமைச்சரான நாளில் இருந்து தினமும் ஆய்வுகள், கூட்டங்கள் என பரபரப்பாகவே இருந்தார். அவருக்கு முன்பாக அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சராக இருந்த ராஜேந்திர பாலாஜியின் ஊழல்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றெல்லாம் அறிவித்தார்.

ஆனால், அப்படியேதும் நடக்கவில்லை என்பதோடு, நாசர் மீதே பல புகார்கள் குவிந்தன. பால் வளத்துறையின் கீழே வரும் ஆவினின் நிர்வாகத்தில் குளறுபடிகள், முறைகேடுகள் என புகார்கள் குவிந்தன. அ.தி.மு.க. ஆட்சியில் தினமும் 40 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்ட நிலையில், இவரது நிர்வாகத்தின் கீழ் ஒரு கட்டத்தில் பால் கொள்முதல் 30 லட்சம் லிட்டராகக் குறைந்ததாகக் கூறப்பட்டது. இந்த நிலையில், சில வாரங்களுக்கு முன்பாக சென்னையின் பல பகுதிகளில் ஆவின் பால் கிடைக்காமல் தட்டுப்பாடு ஏற்பட்டது, அரசைப் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கியது.

இது தவிர, வேறு சில சர்ச்சைகளிலும் அவரது பெயர் அடிபட்டது. ஊடக கேமராக்களுக்கு முன்பாகவே ஒருவரை கல்லைக் கொண்டு எறிந்தது, அமைச்சரின் மகனும் கவுன்சிலருமான ஆசிம் ராஜா உள்ளாட்சி நிர்வாகத்தில் தலையிடுவது என பலவிதங்களிலும் புகார்களுக்கு உள்ளானார் நாசர். இதனால், இவர் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்படலாம் என நீண்ட நாட்களாகவே பேசப்பட்டுவந்தது.

மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினரான டி.ஆர்.பி. ராஜா அமைச்சராக நியமிக்கப்பட்ட பிறகு அவருக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவி பிரமாணம், ரகசியக் காப்பு பிரமாணம் செய்து வைத்தார்

புதிதாக அமைச்சரவையில் இணைக்கப்படும் டி.ஆர். பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்த தி.மு.க. தலைவருமான டி.ஆர். பாலுவின் மகன். 2011ல் முதல் முறையாக மன்னார்குடி தொகுதியில் இருந்து சட்டமன்றத்திற்குத் தேர்வான இவர், தற்போது மூன்றாவது முறையாகவும் அதே தொகுதியில் இருந்து வெற்றிபெற்றார். துவக்கத்திலேயே அமைச்சரவையில் இடம்பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவருக்கு திட்டக் குழுவின் உறுப்பினர் பதவிதான் கிடைத்தது. அதற்குப் பிறகு தி.மு.க. ஐ.டி. விங்கின் செயலராகவும் அவர் நியமிக்கப்பட்டார். ஆட்சி அமைந்து 2 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது அமைச்சரவையில் இடம் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை பட்டம் பெற்றுள்ள டி.ஆர்.பி. ராஜாவுக்கு, எடுத்த எடுப்பிலேயே முக்கியத் துறையான தொழில்துறையைக் கொடுத்திருப்பது பலரது புருவங்களை உயர்த்தியிருந்தாலும், அவர் சிறப்பாகச் செயல்படுவார் என்ற நம்பிக்கையிலேயே இந்தத் துறை வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்ப்பது, உலக முதலீட்டாளர் மாநாட்டை விரைவில் நடத்துவது போன்ற பெரிய சவால்கள் அவர் முன்பாக இருக்கின்றன.

**அமைச்சரவை மாற்றங்களின் பின்னணி**

தகவல் மற்றும் தொழில்நுட்பத் துறையை கவனித்து வந்த மனோ தங்கராஜூக்கு பால் வளத் துறை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆவினின் நிர்வாகத்தைச் சீராக்க வேண்டிய உடனடிப் பொறுப்பு அவருக்கு இருக்கிறது.

பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜனைப் பொறுத்த



வரை நிதித் துறையிலிருந்து தகவல் மற்றும் தொழில்நுட்பத் துறைக்கு மாற்றப்பட்டது ஒரு பின்னடைவுதான் என்றாலும், மிகப் பெரிய சர்ச்சைக்குப் பிறகும் அமைச்சரவையில் நீடிக்கிறார் என்பதே குறிப்பிடத்தக்க விஷயமாக இருக்கும். ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சரான கயல்விழி செல்வராஜ் நீக்கப்படுவார், அவருக்குப் பதிலாக தமிழரசி அந்தத் துறையின் அமைச்சராக நியமிக்கப்படுவார் என்றெல்லாம் பேசப்பட்டாலும், அந்த மாற்றம் நடக்க வில்லை.

இந்த அமைச்சரவை மாற்றத்தின் மூலம் தமிழக அமைச்சரவையில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டிருக்கிறது என்ற விமர்சனமும் இருக்கிறது. அதேபோல, பா.ஜ.க. வெளியிட்ட ஓடியோவுக்காக, திறம்படச் செயல்பட்ட பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜனை நீக்க வேண்டுமா என்ற கேள்வியையும் தி.மு.க. தொண்டர்கள் சமூக வலைதளங்களில் எழுப்பி வருகின்றனர்.

அமைச்சர்கள் மாற்றம் தவிர, முக்கியத் துறைகளின் செயலர்களும் இந்த வார இறுதிக்குள் மாற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முன்பாக தமிழ்நாடு அமைச்சரவை கடந்த ஆண்டு டிசம்பர் 14ஆம் தேதி மாற்றியமைக்கப்பட்டு, உதயநிதி ஸ்டாலின் விளையாட்டுத் துறை அமைச்சராகப் பதவியேற்றார்.

**அமைச்சரவை மாற்றம் பற்றி பிடிஆர் கூறியது என்ன?**

அமைச்சரவை மாற்றம் தொடர்பான பட்டியல் வெளியானதும் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் தனது ட்விட்டர் பக்கத்தில் ஒரு பதிவை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்ட விவரம் பின்வருமாறு:

கடந்த இரண்டு ஆண்டுகள் என் வாழ்விலேயே மிக

(9 ஆம் பக்கம் பார்க்க)

# கையாலாகாத தமிழ்க் கட்சிகள்? தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எந்த இடத்தில் தவறிழைக்கின்றது?

நிலாந்தன்

விசாக பௌர்ணமியன்று தையிட்டி விகாரைக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடத்திய ஆர்ப்பாட்டத்தில் 50க்கும் குறைவானவர்களே பங்குபற்றியிருக்கிறார்கள்.

அவர்களிலும் நான்கு பேர் காணி உரிமையாளர்கள். ஏனையவர்கள் அரசியல்வாதிகளும் கட்சித் தொண்டர்களும்.

அதே நாளில் இரவு யாழ்ப்பாணம் அரியகுளம் சந்தியில் அமைந்துள்ள நாக விகாரையில் இடம்பெற்ற வெசாக் அலங்காரங்களைப் பார்ப்பதற்கு தொகையாக வந்த தமிழ் மக்களால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

அதே இரவு குடாநாட்டின் மற்றொரு தொங்கலில் வல்வெட்டித் துறையில் நடந்த இந்திர விழாவில் பங்குபற்ற ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டிருந்தார்கள். அங்கே இசை நிகழ்ச்சிகளும் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

வெசாக் தினத்திலன்று யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த இந்த மூன்று நிகழ்ச்சிகளையும் தொகுத்துப் பார்க்கும் பொழுது என்ன தெரியவருகிறது? சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகத் திரண்ட மக்களை விட சிங்கள பௌத்த விழா ஒன்றில் பெருந்திரளான தமிழ்மக்கள் பங்கு பற்றியிருக்கிறார்கள்.

அதைவிடப் பெருந்தொகையானவர்கள் ஒரு ஊரின் இந்திர விழாவில் பங்கு பற்றியிருக்கிறார்கள். அந்த ஊர் எதுவென்று பார்த்தால் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிறந்த ஊரும், ஆயுதப் போராட்டத்தில் அதிக தொகை தியாகிகளைக் கொடுத்த ஊரும் ஆகும். இது தான் யாழ்ப்பாணத்தின் ஆகப்பிந்திய மூன்று காட்சிகள்.

தையிட்டி விகாரைக்கு எதிராக குறைந்தளவு மக்களே திரண்டமைக்கு என்ன காரணம்? அந்த போராட்டத்திற்கான அழைப்பை தமிழ்த் தேசிய பேரவை என்ற ஒரு அமைப்பு விடுத்திருந்தது.

அதை ஒரு பொதுக் கட்டமைப்பு என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைக்கின்றது. அந்தப் பெயரை முன்னணி ஏற்கனவே பயன்படுத்தியுமிருக்கிறது. தமிழ் மக்கள் பேரவையிடமிருந்து அந்த அமைப்பை வித்தியாசப்படுத்துவதற்காக பெயரில் சிறிது மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஆனால் அந்தக் கட்டமைப்பின் அழைப்பை ஏற்று பொதுமக்கள் அங்கே திரண்டு வரவில்லை. அதற்கு யார் பொறுப்பு? அழைத்த கட்சி பொறுப்பா? அல்லது வராத மக்கள் பொறுப்பா?

கடந்த 13 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் இடம்பெற்ற மக்கள் எழுச்சிகளை தொகுத்துப் பார்த்தால், ஒரு விடயம் தெளிவாகத் தெரியும். ஒரு கட்சி அழைத்த ஆர்ப்பாட்டங்களை விடவும், சிவில் சமூகங்களின் தலைமையில் பல கட்சிகள் அழைக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கு ஒப்பீட்டளவில் அதிகளவு சனம் திரள்கிறது.

பொங்கு தமிழ், எழுக தமிழ், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணி என்று உதாரணங்களைக் கூறலாம்.

ஒரு கட்சி அழைக்கும் ஆர்ப்பாட்டத்துக்கு தொகையான மக்கள் வருவது என்றால், அந்தக் கட்சிக்கு கிராம மட்டத்தில் பரவலான கட்டமைப்புகள் இருக்க வேண்டும். முன்னணியிடம் மட்டுமல்ல வேறு யாரிடமும் அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இல்லை.

மிகக் குறுகிய கால அழைப்புக்குள் அவ்வளவு தொகை மக்களைத் திரட்ட முடியாது. அப்படித் திரட்டுவதென்றால் அந்தப் போராட்டத்திற்கான காரணம் மக்கள் மத்தியில் அதிகம் நொதிக்க வேண்டும். முன்னணி விவகாரத்தை பொலிஸாரோடு ஒரு மோதலாக மாற்றியது.

எனினும் மக்கள் மத்தியில் நொதிப்பு எதுவும் நிகழவில்லை. அதனால் மக்களும் அங்கே பெரியளவில் போகவில்லை. போராட்டத்தைத் தொடங்கிய அன்றிரவு முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் சட்டத்தரணி ஒருவரும் மற்றொருவருமாக குறைந்த தொகையினர்தான் அங்கே காணப்பட்டார்கள். அடுத்த நாளும் வேறு சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் உட்பட குறைந்தளவு எண்ணிக்கையானவர்களே அங்கே காணப்பட்டார்கள்.

அண்மை வாரங்களில் தமிழ்ப் பகுதிகளில் நடந்து வரும் சிங்கள பௌத்த மயமாக்களுக்கு எதிரான பெரும்பாலான போராட்டங்களில் குறைந்தளவு மக்கள்தான் கலந்து கொள்கிறார்கள்.

இதில் வவுனியாவில் நடந்த ஊர்வலத்தில் ஒப்பீட்டளவில் கூடுதலான தொகையினர் காணப்பட்டார்கள். பல்கலைக்கழக மாணவர்கள் ஒழுங்குபடுத்திய வடக்கில் இருந்து கிழக்கு நோக்கிய பேரணியிலும் பெரிய அளவில் மக்கள் பங்களிக்கவில்லை.

அந்தப் பேரணியின் பின்னணியில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான அமைப்பே காணப்பட்டது. அண்மை வாரங்களாக நடந்து வரும் பெரும்பாலான போராட்டங்கள் குறியீட்டு வகைப்பட்ட சிறு திரள் போராட்டங்கள்தான். அல்லது ஒரு நாள் கடையடைப்புகள்தான்.

அரசாங்கத்துக்கு நோகக்கூடிய போராட்டங்கள் அவையல்ல. உலக சமூகத்தை தம்மை நோக்கி ஈர்க்கத்தக்க சக்தி அவற்றுக்கு குறைவு. தமிழ் மக்கள் எதிர்க்கிறார்கள் என்ற ஒரு விடயத்தை  வெளிக் கொண்டு வந்தது மட்டும்தான் அவற்றுக்குள்ள முக்கியத்துவம்.

தையிட்டியிலும் அதே நிலைமைதான். தையிட்டி விகாரை விவகாரமானது முன்னணி தலையிட்ட பின் சூடு பிடித்தது. ஆனாலும் அதை அடுத்தடுத்த கட்டங்களுக்கு வளர்த்துச் செல்ல முன்னணியால் முடியவில்லை. அது ஏறக்குறைய ஒரு கட்சிப் போராட்டம்தான்.

போராட்டம் தொடங்கிய மறு நாள் ஏனைய கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் அங்கே காணப்பட்டார்கள். ஆனால் அது “பிரசன்ற் மார்க்” பண்ணும் வேலை தான். அது ஒரு முழுமையான பங்களிப்பு அல்ல. அதன் பின் நடந்த போராட்டங்களில் ஏனைய கட்சிகள் முழுமனதோடு ஒத்துழைக்கவில்லை.

அவ்வாறு ஒத்துழைப்பு நல்கத்தக்க நல்லுறவை முன்னணி ஏனைய கட்சிகளோடு பேணவும் இல்லை. தன்னை ஒரு தூய தேசியவாத கட்சியாகக் காட்டிக் கொள்ளும் முன்னணி, ஏனைய கட்சிகளை ஒட்டுக்குழுக்கள், துரோகிகள், வெளிநாடுகளின் கைக்கூலிகள், ஏஜென்ட்கள் போன்ற வார்த்தைகளின் மூலம் விமர்சித்து வருகிறது.

அதனால் ஏனைய கட்சிகளோடு இணைந்து ஒரு போராட்டத்தை முன்னெடுப்பதில் அக்கட்சிக்கு நடைமுறையில் வரையறைகள் உண்டு.

அதற்காக ஏனைய கட்சிகள் பரிசுத்தம் என்றில்லை. கடந்த வாரத்துக்கு முதல் வாரம் நடந்த கடையடைப்பில் ஏனைய ஏழு கட்சிகள் ஒன்றாகத் திரண்டன.

ஆனால் அந்தத் திரட்சி விசுவாசமானது அல்ல. ஏனென்றால் தமிழரசுக் கட்சி தனது முன்னாள் பங்காளிக் கட்சிகளை ஒட்டுக்குழுக்கள் என்றும், போதைப்பொருள் வித்தவர்கள் என்றும், ராணுவச் சோதனைச் சாவடிகளில் முகமூடி அணிந்து தலையாட்டியவர்கள் என்றும், காட்டிக் கொடுத்தவர்கள் என்றும் குற்றம் சாட்டியிருந்தது.




எனினும் தேவை என்று வந்த பொழுது அந்தக் கட்சிகளும் தமிழரசுக் கட்சியும் ஒன்றாக திரண்டு கடையடைப்புக்கு அழைப்பு விடுத்தன.

ஆனால் முன்னணி அவ்வாறான உறவுகளுக்குத் தயாரில்லை. எனவே ஒரு ஆர்ப்பாட்டத்திற்கு அல்லது எதிர்ப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுப்பது என்றால் ஏனைய கட்சிகளை நம்பி முன்னணி அதில் களமிறங்க முடியாது.

தமிழ் சிவில் சமூக மையத்தைத் தவிர ஏனைய, குடிமக்கள் சமூகங்கள் மத்தியிலும் முன்னணிக்கு பெரிய வரவேற்பு இல்லை. குறிப்பாக பொதுக் கட்டமைப்புகளைக் குறித்து அண்மையில் ஓர் ஊடகத்துக்கு கஜேந்திரகுமார் வழங்கிய பேட்டியில் அவர் பெரும்பாலான பொதுக் கட்டமைப்புகளை நிராகரித்திருந்தார்.

அவற்றை புலம்பெயர்ந்த தமிழர்கள் இயக்குகிறார்கள், வெளிநாட்டு உளவு அமைப்புகள் இயக்குகின்றன என்ற பொருள் தரும் விதத்தில் அவருடைய பேட்டி அமைந்திருந்தது.

அதன்படி பொதுக்கட்டமைப்புகளையும் முன்னணி ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. அதனால்தான் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்னரும், அன்னை பூபதியின் நினைவிடத்திலும் பொதுக்கட்டமைப்போடு முன்னணி முரண்பட்டது. இந்த மோதல்கள் வரும் 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலிலும் இடம்பெற வாய்ப்புகள் உண்டு. ஏனெனில் ஏற்கனவே ஒரு பொதுக் கட்டமைப்பு அந்த நினைவு கூர்தல் தொடர்பாக அறிக்கை விட்டிருக்கிறது.

இவ்வாறு நடைமுறையில் உள்ள பொதுக் கட்டமைப்புகளோடு முரண்படும் முன்னணியானது, எதிர்காலத்தில் பொதுக் கட்டமைப்புகளோடு இணைந்து மக்களை அணி திரட்டும் வாய்ப்புகளும் மங்கலாகவே தெரிகின்றன.

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் மக்களைத் திரட்ட முடியாமல் போனமை என்பது தனிய முன்னணியின் தோல்வி மட்டுமல்ல. அந்த விகாரை விடயத்தில் தொடக்கத்தில் இருந்தே மெத்தனமாக இருந்த, அல்லது வேறு உள்நோக்கங்களோடு அதை கண்டும்காணாமலும் விட்ட பிரதேச சபைத் தவிசாளர் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்.

அப்பொழுது கூட்டமைப்பு இப்பொழுது தமிழரசுக் கட்சி. இதில் தமிழரசு கட்சிக்கும் குற்றப் பொறுப்பு உண்டு. கடந்த சில ஆண்டுகளாக விகாரை கட்டப்பட்டு வருவது எல்லாருக்குமே தெரியும். இந்த விடயத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறிய பிரதேச சபை தவிசாளர் சுமந்திரனுக்கு நெருக்கமானவர் என்பது மேலதிக தகவல்.

விகாரை படிப்படியாக கட்டப்பட்டு 100 அடிவரை உயர்ந்த பின்தான் எல்லாருடைய கண்களுக்கும் தெரிந்தது என்பதே தமிழரசிகளின் கையலாகாத்தனம் தான்.

முன்னணி அதைத் தன் கையில் எடுத்து போராட்டத்தை மக்கள் மயப்படுத்த முடியாமல் போனதும் அக் கட்சியின் பலவீனம்தான். தையிட்டி விகாரை தனியார் காணியில் கட்டப்பட்டுள்ளது என்பது மட்டுமல்ல, தமிழ்க் கட்சிகளின் கையாலாகத்தனத்தின் மீதுந்தான் கட்டப் பட்டிருக்கிறது.

●

# தமிழகத்தில் அமைச்சரவை மாற்றம்:...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் நிறைவான ஆண்டுகளாகும் . மாண்புமிகு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையின் கீழ் பெருந்தொற்றுக் காலத்தில் ஒரு திருத்தப்பட்ட பட்ஜெட்டையும் (21 - 22), பெருந்தொற்றுக்குப் பிறகு இரண்டு ஆண்டு பட்ஜெட்டுகளையும் (22 - 23, 23 - 24) சமர்ப்பித்துள்ளேன். முந்தைய ஆட்சியின் விளைவாக உட்சபட்ச பற்றாக்குறை மற்றும் கடன் விகிதங்களைப் பெற்றிருந்த போதிலும், நாங்கள் வரலாறு காணாத வகையில் சமூக நலத் திட்டங்களிலும், மூலதனச் செலவினங்களிலும் முதலீடு செய்துள்ளோம். இதனை என் பொது வாழ்விலும், என் வாழ்க்கையிலும் மிகச் சிறப்பான பகுதியாகக் கருதுகிறேன்.

நிதி ஆதாரங்களை வலுப்படுத்துதல் மற்றும் சமூக நல செலவினங்கள் ஆகியவை சமத்துவ சமுதாயத்திற்கு அவசியமான படிகள் என்றாலும், வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான உந்து சக்தியாக விளங்குவது முதலீடுகள், நிறுவன விரிவாக்கம் மற்றும் வேலை வாய்ப்புகள் உருவாக்கம் ஆகியவைகளே ஆகும்.

உலகளவில் இன்று முதலீடு மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான துறையாக விளங்கும் தகவல் தொழில்நுட்ப இலக்காவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எனக்குத் தற்போது வழங்கியதற்கு நான் நன்றியுள்ளவனாவேன். தொழில்நுட்பமே எதிர்காலத்தை வடிவமைக்கிறது என்பதை நாம் அறிவோம்.

தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு இத்துறையில் முன்னோடியாக இருந்தபோதிலும், கெடுவாய்ப்பாக கடந்த பத்தாண்டுகளில் இந்தத் துறையில் நமது உண்மையான செயல் திறனை எட்டுவதில் நாம் பின்தங்கிவிட்டோம். எனவே எனக்கு முன்னாள் இத்துறையை நிருவகித்த மனோ தங்கராஜ் அவர்களின் பெருமுயற்சிகளின் தொடர்ச்சியாக இத்துறையில் கூடுதல் முதலீடுகளை ஈர்ப்பதற்கும், புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கத்தை விரைவுப்படுத்துவதற்கும், தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழகத்தை மீண்டும் ஒரு முன்னணி மாநிலமாக நிலைநிறுத்தும் வளர்ச்சிக்கான செயல்பாடுகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளேன்.

கடந்த இரண்டு ஆண்டுகள் நிதித்துறை பொறுப்பு வழங்கியதற்காகவும், தற்பொழுது எழுச்சிமிக்க புதிய பொறுப்பை வழங்கி மக்களுக்காகப் பணியாற்றும் வாய்ப்பை அளித்துள்ள என் தலைவர் மாண்புமிகு முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

●

# நலன்புரி கொடுப்பனவுகள் மலையக மக்களுக்கு கிடைக்குமா!

## இராதகிருஷ்ணன் எம். பி. கேள்வி

கொழும்பு, மே 13

17 ஆயிரத்துக்கும் குறைவான மாத வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நலன்புரி கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்ற நியதி காணப்படும்போது மலையக மக்களுக்கு இந்த கொடுப்பனவு கிடைக்குமா என்ற சந்தேகம் காணப்படுகிறது. பொருளாதார ரீதியில் பெருந்தோட்ட மக்கள் பல்வேறு வழிமுறையில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே இவ்விடயத்தில் பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் நிதியமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் சபையில் வலியுறுத்தினார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய அவர்,

ஏழ்மை நிலையில் உள்ள மக்களுக்கான சிறந்த நலன்புரி கொடுப்பனவு திட்டமாக அஷ்வசும் புதிய செயல் திட்டம் காணப்படுகிறது. பல இலட்சம் பேருக்கு இந்த திட்டத்தின் ஊடாக நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 6 ஆயிரம் ரூபா குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கு மாத்திரமே அரச நலன்புரி கொடுப்பனவு வழங்கப்பட்டன.இந்த தொகை தற்போது 17,772 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் 46 சதவீத அத்தியாவசிய பொருட்களின் விலை பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன. மாத வருமானம் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை ஆகியவற்றை மதிப்பிட்டு ஒரு குடும்பத்தின் நிலையை மதிப்பிட முடியும்.

மாதம் 17 ஆயிரத்துக்கும் குறைவான வருமானம் பெறும் தரப்பினருக்கு அல்லது குடும்பத்துக்கு இந்த நிவாரணம் வழங்க வேண்டும் என்ற வரையறை காணப்படுவதால் பெருந்தோட்ட மக்களுக்கு இந்த நலன்புரி கொடுப்பனவு கிடைக்குமா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

ஏற்கனவே வழங்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவிலும் மலையக மக்களில் பெரும்பாலானோர் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.குடும்ப அடிப்படையில் மலையக மக்களுக்கு இந்த நிவாரணம் கிடைக்குமா என்பதை நிதியமைச்சு தெளிவுப்படுத்த வேண்டும்.

விவசாயத்துறை வீழ்ச்சி,அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் ஆகிய காரணிகளினால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.இந்த நலன்புரி திட்டத்துக்கு உலக வங்கி வழங்குகிறது.ஆகவே இந்த நிதி தொகை நியாயமான முறையில் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம் என்றார்.

(ஐ)

# மக்களுக்கான நலன்புரி கொடுப்பனவை கிராம அலுவலர்கள் ஊடாகவே வழங்குக

## சாள்ஸ் எம். பி. வலியுறுத்து

கொழும்பு, மே 13

அரசாங்கத்தால் வழங்கப்படும் நலன்புரி கொடுப்பனவுகள் அரசியல் தலையீடின்றி, உண்மையில் வறுமையில் இருப்பவர்கள் யார் என்பதனை அடையாளம் கண்டு வழங்க வேண்டும். இனங்களுக்கு இடையிலான சமத்துவ கொள்கை பின்பற்றப்பட்டிருந்தால் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைந்திருக்கலாம் என்று தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய அவர், நாட்டின் மொத்த சனத்தொகையில் 42 வீதமான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கிறார்கள். இனங்களுக்கு இடையிலான சரியான சமத்துமான அரசியல் கொள்கையும், சரியான பொருளாதார கொள்கையும் இருந்திருந்தால் இலங்கையில் வறுமையை ஒழித்திருக்க முடியும்.

எனினும் நலன்புரி கொடுப்பனவுகளின் மூலம் வறுமையை ஒழிக்க முடியாது என்பதே என்னுடைய நிலைப்பாடாக உள்ளது. நலன்புரி கொடுப்பனவுகளில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. அந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக அமைச்சால் புதிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அது பரிசீலனையில் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

அரசியல் ரீதியலான மற்றும் பக்கச்சார்பான பரிசீலனை இன்றி வறுமையில் இருப்பவர்கள் யார் என்பதனை முறையாக ஆராய்ந்து இந்த கொடுப்பனவுகளை வழங்குவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும். வயோதிபர்களுக்கான கொடுப்பனவுகள் தபால் நிலையங்கள் மற்றும் உப தபாலகங்களிலும் வழங்கப்பட்டு வந்த நிலையில் தற்போது அதனை சமுர்த்தி வங்கிகளில் பெற்றுக்கொள்ள முடியும் என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளமை சிக்கலானது. சில இடங்களிலேயே சமுர்த்தி வங்கிகள் உள்ளன.

இதனால் அந்தப் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக பெருமளவு பணத்தை செலவிட்டு செல்ல வேண்டியுள்ளது. வயது முதிர்ச்சியால் அவர்களுக்கு தூர இடங்களுக்கு செல்வது சிக்கலானது. இதனால் இந்த கொடுப்பனவை கிராம அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு ஏற்பாடுகளை செய்ய வேண்டும் - என்றார். (ஐ)

# வைத்தியர்களை தாக்கிய சந்தேக நபர் கைதானார்!

கொழும்பு, மே 13

குருநாகல் வைத்தியசாலையில் வைத்தியர்கள் இருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மாத்தளை பிரதேசத்தை சேர்ந்த 24 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதானார்.

தம்புள்ளை பிரதேசத்தில் காரில் பயணித்தபோதே சந்தேக நபர் குருநாகல் பொலிஸ் நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் பயணித்த காரும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கடந்த 8ஆம் திகதி குருநாகல் வைத்தியசாலையின் விடுதி இலக்கம் 72 இல் கடமையாற்றும் பெண் வைத்தியர் மற்றும் ஆண் வைத்தியர் ஒருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். தாக்குதல் சந்தேகநபரை கைது செய்யுமாறு கோரி குருநாகல் வைத்தியசாலை வைத்தியர்கள் நேற்று முன் தினம் ஒரு நாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)






# கல்முனை ஆதார வைத்தியசாலையில் சித்திரைப் புத்தாண்டு கலாசார விழா





காரைதீவு, மே. 13

கல்முனை ஆதார வைத்தியசாலையில் சித்திரை வருடப் பிறப்பை சிறப்பிக்கும் முகமாக சித்திரைப் புத்தாண்டு கலாசார விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர்.இரா.முரளீஸ்வரன் தலைமையில் இது மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் முட்டி உடைத்தல், யானைக்கு கண் வைத்தல், மிட்டாய் சேகரித்தல், சோடாவிற்கு வளையம் போடுதல், பணிஸ் சாப்பிடுதல், பலூன் ஊதி உடைத்தல், வினோத உடைப்போட்டி, சாக்கு ஓட்டம், கயிறு இழுத்தல், சங்கீத கதிரை போன்ற பல விளையாட்டுக்கள் நடத்தப்பட்டு பல பரிசில்களும் வழங்கப்பட்டன.

(அ)

# ஆயுர்வேத மருந்தகத்தின் பரிசளிப்பு விழா!

காரைதீவு, மே. 13

காரைதீவு ஆயுர்வேத மத்திய மருந்தகத்தின் பரிசளிப்பு விழா இ.கி.மி.பெண்கள் பாடசாலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

காரைதீவு ஆயுர்வேத மத்திய மருந்தக வைத்திய பொறுப்பு அதிகாரி டாக்டர் எம். சி எம். காலிட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்பி.அப்துல் வாஜித் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், கோட்டக்கல்வி பணிப்பாளர் ஜே.டேவிட் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

"இயற்கையோடு இணைந்து வாழ்வோம்" என்று விழிப்புணர்வு கருத்தரங்கும்," மருத்துவ தாவரங்கள்" வினா விடை போட்டியில் வெற்றி பெற்ற காரைதீவு கோட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றன.

(அ)



# கிழக்கில் ரயில் போக்குவரத்து தாமதம்

திருமலை, மே. 13

திருகோணமலை சீனன்குடாவிலிருந்து சீதுவைக்கு கோதுமைமா ஏற்றிச் சென்ற ரயிலொன்று நேற்று அதிகாலை மஹவ பகுதியில் தடம்புரண்டது.

இதனால் கிழக்கு மார்க்கத்திலான ரயில் போக்குவரத்து தாமதமடைந்ததாக ரயில்வே கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த இரவு நேர தபால் ரயில் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த புலதிசி நகர்சேர் கடுகதி ரயில் மற்றும் மஹவையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த ரயில்கள் தாமதமடைந்துள்ளன.

(அ)

# முள்ளிவாய்க்காலை நினைவேந்தி மட்டக்களப்பில் கஞ்சி வழங்கல்!



மட்டக்களப்பு, மே 13

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்று ஆரம்பமானது. இதையொட்டி 'கஞ்சி பரிமாறுவோம் முள்ளிவாய்க்கால் வலி சுமந்து கதை பகிர்வோம்' என்ற தொனிப்பொருளில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் இறுதிப் போரின்போது மக்களின் பசியைப் போக்க கஞ்சி மட்டுமே உணவானது. இதனை நினைவேந்தலுக்கான அடையாளமாக்கி முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயல்பாடு வடக்கு - கிழக்கு எங்கும் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த நிகழ்வை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று மட்டக்களப்பு காந்தி பூங்காவில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், மதத் தலைவர்கள் அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலர் கூடி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கடைப்பிடிக்கும் விதமாக முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பகிர்ந்து பருகினர்.

# "இனவாத நோக்குள்ள ஆளுநரை மாற்றுங்கள்!"

மட்டக்களப்பு, மே 13

கிழக்கு மாகாண ஆளுநர் சிங்கள இனவாத நோக்குடனேயே செயல்படுகிறார். எனவே, அவரை மாற்ற வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட கால்நடை பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் அவர்கள் கூட்டிய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தனர்.

இனங்களுக்கு இடையே முரண்பாடுகள் கால்நடைகளை பராமரிக்கும் பகுதிக்குள் சிங்கள குடியேற்றங்களை குடியேற செய்வதற்காக அந்தப் பகுதியிலிருந்து எம்மை வெளியேற்றுவதற்கான உத்திகளை கிழக்கு மாகாண ஆளுநர் முன்னெடுத்து வருகிறார். இதனால் இனங்களிடையே முரண்பாடுகள் ஏற்படும் நிலைமை காணப்படுகிறது என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# தாய்லாந்திலிருந்து புத்தர் சிலையுடன் திருகோணமலைக்கு வரும் 50 பிக்குகள்

## நாளை நடைபெறும் நிகழ்வுக்கு தடல்புடல் ஏற்பாடுகள்

திருமலை, மே. 13

**திருகோணமலை நகரில் தொல்பொருள் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட இடத்தில் புத்தர் சிலை ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை நிர்மாணிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நான்கு அடி உயரம் கொண்ட இந்த புத்தர் சிலையானது திருகோணமலை நகரில் உள்ள நெல்சன் திரையரங்குக்கு முன்னால் நிறுவப்படவுள்ளது.

2 ஆயிரத்து 700 ஆண்டுகளுக்கு முன்னர் தாய்லாந்தில் இருந்து திருகோணமலைக்கு வந்து இறங்கியதாக கூறப்படும் பிக்குகளை நினைவு கூரும் முகமாக இந்த நிர்மாணிப்பு மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நிகழ்விற்காக தாய்லாந்தில் இருந்து குறித்த புத்தர் சிலையோடு 50 பிக்குகள் இன்று இலங்கை வரவுள்ளதாகவும் இவர்கள் தங்குவதற்காக நிலாவெளியில் உள்ள விடுதி ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் காந்தி சுற்றுவட்டப் பகுதியில் கடல் வழியாக பிக்குகள் வந்து இறங்கிய பின்னர் பாதயாத்திரை மூலம் குறித்த இடத்திற்குச் செல்லவுள்ளனர்.

அங்கு தாய்லாந்தில் இருந்து அவர்களால் கொண்டு வரப்படுகின்ற 4 அடி உயரமான புத்தர் சிலையை வைத்து ஒரு மணித்தியாலம் பிரித் நிகழ்வு இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)





# முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயல்பாடு திருகோணமலையில்!

திருமலை, மே. 13

வலி சுமந்த காலத்தில் உயிர்காத்த முள்ளிவாய்க்கால் கஞ்சியின் வரலாற்றைத் தொடர்ந்தும் இளைய சமூகத்தினருக்கு கடத்தும் நோக்கில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்திட்டம் வல்வெட்டித்துறை ஆலடிச் சந்தியில் கடந்த 9ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் என பல்வேறு பகுதிகளிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

நேற்றுக் காலை 8:30 மணியளவில் திருகோணமலை சிவன்கோவிலடி பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்ற யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சிக்கான அரிசி மற்றும் விறகு பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு திருகோணமலை சிவன் கோவிலடி முன்றலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டது.

தொடர்ச்சியாக இனப்படுகொலை செய்யப்பட்ட உறவுகளை நினைவு கூர்ந்து பொதுமக்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# உக்ரைனுக்கு இங்கிலாந்தின் நீண்டதூர குருஸ் ஏவுகணை!

## களநிலைமைகள் மாற்றமடையலாம்




லண்டன், மே. 13

**உக்ரைனுக்கு நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை வழங்குவதை இங்கிலாந்து அரசு உறுதிப்படுத்தியுள்ளது.**

உக்ரைன் தனது ஆள்புல நிலப்பரப்பை ரஷ்யாவிடமிருந்து பாதுகாப்பதற்காக நீண்ட தூர குருஸ் ஏவுகணைகளை வழங்க லண்டன் முடிவு செய்தது என்ற தகவலை இங்கிலாந்தின் பாதுகாப்புச் செயலர் பென் வொலஸ் உறுதிப்படுத்தினார். இங்கிலாந்து - பிரான்ஸ் இரண்டு நாடுகளினதும் கூட்டுத் தயாரிப்பான குருஸ் ஏவுகணைகள் சுமார் 250 கிலோ மீற்றர்கள் தூரம் சென்று இலக்கைத் தாக்கும் வல்லமை கொண்டவை ஆகும். போர் விமானங்கள் மூலம் வான் வழியாக ஏவப்படக் கூடிய இந்தவகை ஏவுகணைகள் உக்ரைன் போர்க் களத்தில் பெரும் திருப்பங்களை ஏற்படுத்தலாம் என்று போரியல் நிபுணர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

இந்த ஏவுகணைகள் ஏற்கனவே உக்ரைனுக்குக் கிடைத்துவிட்டன. அல்லது அங்கு அனுப்பப்பட்டுள்ளன என்று லண்டனில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உக்ரைன் வசம் உள்ள சோவியத் காலப் போர் விமானங்கள் மூலம் இவற்றை எடுத்துச் சென்று வான் வழியாக ஏவமுடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

போரின் இப்போதைய கட்டத்தில் இவை போன்ற நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்குவதற்கு அமெரிக்காவும் ஏனைய சில நேட்டோ நாடுகளும் மறுப்புத்தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில் - கீவ் அரசின் பல நாள் கோரிக்கையை ஏற்று இவ்வாறான நீண்ட தூர ஏவுகணைகளை வழங்குகின்ற முதலாவது மேற்குலக நாடு இங்கிலாந்து ஆகும். அமெரிக்கா கடைசியாக உக்ரைனுக்கு வழங்கிய ஹிமார்ஸ் ஏவுகணைகள் சுமார் எண்பது கிலோ மீற்றர்கள் தூரத்துக்கு மட்டுமே பறந்து எதிரி இலக்குகளைத் தாக்க வல்லவை.

உக்ரைன் அதன் இறைமைக்குரிய நில புல எல்லைக்குள் எங்கு வேண்டுமானாலும் தனது குருஸ் ஏவுகணைகளைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தலாம். ஆனால் ரஷ்யாவின் நிலப்பரப்புக்குள் அவற்றைப் பயன்படுத்தக் கூடாது என்ற கடும் நிபந்தனையை லண்டன் விதித்துள்ளது. உக்ரைனின் ஆதிபத்திய எல்லை என்பது ரஷ்யா ஆக்கிரமித்து இணைத்துக் கொண்ட கிறீமியா குடாவையும் உள்ளடக்கிய நிலப்பரப்பு ஆகும்.

ரஷ்யப் படைகளுக்கு எதிராக உக்ரைன் நீண்ட நாள்களாகத் திட்டமிட்டு வந்த பெரும் எதிர்த் தாக்குதல் எந்த வேளையிலும் தொடங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கட்டத்தில் லண்டன் வழங்கியிருக்கின்ற நீண்ட தூர ஏவுகணைகள் ரஷ்யப்படைகளது முன்னரங்குகளைத் தாக்குவதற்குப் பெரும் வாய்ப்பாக இருக்கும் என்பதால் களத்தில் உக்ரைன் படைகளது கை ஓங்கலாம் என்று கருதப்படுகிறது.

இதேவேளை, போரில் நடுநிலைமை வகிப்பதாகக் கூறிக் கொள்கின்ற தென் ஆபிரிக்கா, மொஸ்கோவுக்கு ஆயுத தளபாடங்களை வழங்கியுள்ளது என்ற ஒரு பரபரப்பான தகவலை அந்த நாட்டுக்கான அமெரிக்கத் தூதர் வெளியிட்டிருக்கிறார். தென் ஆபிரிக்கத் துறை முகத்தில் வைத்து ரஷ்யாவின் கப்பல் ஒன்றில் கடந்த டிசெம்பர் மாதம் ஆயுத தளபாடங்கள் ஏற்றப்பட்டன என்று அமெரிக்கத் தூதர் உள்நாட்டு செய்தி ஊடகம் ஒன்றிடம் தெரிவித்திருக்கிறார். (அ)

# பாண் தயாரிப்பில் முதலிடத்தை வென்ற ஈழத் தமிழருக்கு பாரிஸ் மேயர் பாராட்டு



பாரிஸ், மே. 13

பாரிஸ் நகரின் மிகச் சிறந்த பாணைத் தயாரித்து சாதனை படைத்த ஈழத் தமிழ் இளைஞர் தர்சன் செல்வராஜாவின் வெதுப்பகத்தில் பாண் வாங்குவதற்குப் பலரும் முண்டியடிக்கின்றனர்.

“நான் எப்போதும் வேறு கடைகளில் பாண் வாங்குவேன். இந்தச் செய்தி அறிந்த பிறகு இடத்தை மாற்றிக் கொண்டேன். இங்கே கிடைக்கின்ற பாண் மொறு மொறு என்று மிகச் சுவையாக இருக்கிறது. வாய்க்கு இதமாக இருக்கிறது - என்று பாரிஸ்வாசி ஒருவர் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் கூறினார்.

பாரிஸ் நகரின் சிறந்த பாணைத் தயாரிக்கின்ற பேக்கரியாளரைத் தெரிவு செய்வதற்காகப் பாரிஸ் நகர சபையால் ஆண்டு தோறும் நடத்தப்படுகின்ற போட்டியில் நகரின் 20 ஆவது நிர்வாகப் பிரிவில் அமைந்துள்ள **“Au levain des Pyrénées”** என்ற வெதுப்பகம் முதல் இடத்தை வென்றுள்ளது. அதன் உரிமையாளரே தர்சன் செல்வராஜா.

பாரிஸ் நகர மேயர் ஆன் கிடல்கோ தனது ருவீற்றர் பதிவு ஒன்றில் அவருக்கும் அவரது வெதுப்பகத்துக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான போட்டிக்கு நடுவர்கள் சபையால் மொத்தம் 175 வெதுப்பகங்களின் பாண்கள் பெறப்பட்டிருந்தன. அவற்றில் சரியான நிறை மற்றும் அளவுகளைக் கொண்டிராத 49 பாண்கள் போட்டியில் இருந்து விலக்கப்பட்டன. பொதுவாகப் பாண்கள் 50-55 சென்ரிமீற்றர் நீளம் மற்றும் 250 முதல் 270 கிராம் எடை என்பவற்றைக் கொண்டிருந்தல் வேண்டும். 126 பேக்கரிகளது பாண்கள் பிரபல சமையலாளர்களை உள்ளடக்கிய தெரிவுக் குழுவினரால் சுவைத்துப் பரீட்சிக்கப்பட்டன. அவற்றில் மிகச் சிறந்த பாண் என்ற தரத்தை **“Au levain des Pyrénées”** வெதுப்பகம் வென்றது.

அதன் உரிமையாளருக்கு 4 ஆயிரம் ஈரோக்கள் பணப் பரிசையும் பாராட்டுப் பத்திரத்தையும் பாரிஸ் நகரசபை வழங்கவுள்ளது. அத்துடன் அவரது வெதுப்பகம் அடுத்த ஓராண்டு காலம் நாட்டின் அதிபர் மக்ரோனின் வசிப்பிடமாகிய எலிஸே மாளிகையின் சமையலறைக்கும் பாரிஸ் நகரசபை மண்டபத்துக்கும் தினமும் பாணை விநியோகிக்கின்ற பெரும் வாய்ப்பையும் பெறுகிறது.

உப்பின் அளவு முதற் கொண்டு அதன் சுவை, தரம், பாரம்பரிய தயாரிப்பு முறை எனப் பல்வேறு அளவீடுகளில் சிறந்த பாண் தெரிவு செய்யப்பட்டது. பாணைக் கத்தியால் வெட்டும் போது அது எழுப்பும் ஒலியும் கூட கவனத்தில் கொள்ளப்பட்டது என்று நடுவர் ஒருவர் கூறுகிறார்.

தர்சன் செல்வராஜா இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து 2006 ஆம் ஆண்டு பிரான்ஸ் வந்தவர். இத்தாலி உணவகம் ஒன்றில் பணியாற்றியவர்.

அங்கே ஏற்பட்ட ஓர் அறிமுகம் காரணமாகத் தனது உணவகத் தொழிலைக் கைவிட்டுச் சுயமாக வெதுப்பகம் ஒன்றைப் பொறுப்பேற்று நடத்தி இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

“வெற்றிச் செய்தியை அறிந்தவுடன் அழுதுவிட்டேன்” என்று அவர் பாரிஸ் செய்தி ஊடகம் ஒன்றிடம் கூறியிருக்கிறார்.

“நாங்கள் ஆண்டு தோறும் போட்டியில் பங்கு பற்றிவந்தோம். இந்த முறை வெற்றிக்காகக் காத்திருந்தோம். ஆச்சரியமாக உள்ளது. எங்கள் பாண் தயாரிப்புகள் ஏற்கனவே வாடிக்கையாளர்களிடம் மிகுந்த நன்மதிப்பைப் பெற்றவை..” -என்று அவர் தெரிவித்துள்ளார்.

2018 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டித் தெரிவில் அவரது பேக்கறி மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இந்த முறை நகரசபை நடத்திய போட்டி முப்பதாவது ஆண்டுக்குரியது. (அ)

# இந்தியப் பிரதமர் மோடி ஜூன் 22 அமெ. பயணம்

## வரவேற்பு வெளியிட்ட வெள்ளை மாளிகை



நியுயோர்க், மே. 13

எதிர்வரும் ஜூன் மாதம் 22 ஆம் திகதி பிரதமர் மோடி அமெரிக்க பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், இந்த பயணம் தொடர்பாக வெள்ளை மாளிகை வரவேற்பை வெளியிட்டுள்ளது.

பிரதமர் மோடியின் அமெரிக்கப் பயணம் இரு நாடுகளுக்கு இடையிலும், அவற்றின் மக்களுக்கு இடையிலும் நெருக்கமான நட்புறவை மேம்படுத்தும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

ஜூன் 22 ஆம் திகதி அதிபர் ஜோ பைடனும் அவரது மனைவியும் வெள்ளை மாளிகையில் பிரதமர் மோடிக்கு விருந்து அளிக்க உள்ளனர் என்று அதிபரின் ஊடகச் செயலாளர், கரீன் ஜீன் பியரி அறிவித்துள்ளார்.

மேலும் இந்தோ பசிபிக் சுதந்திரமான வர்த்தகம், பாதுகாப்பு, விண்வெளி ஆய்வு தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விவகாரங்களில் இருநாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்பாக இந்த சந்திப்பு அமையும் என்றும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

# உக்கிரமடைந்துள்ளது உக்ரைன்-ரஷ்ய போர்

## பயந்து தப்பியோடும் ரஷ்ய படை வீரர்கள்

கீவ், மே. 13

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் 15 மாதங்களைக் கடந்த நிலையில், பாக்முட் அருகே முன்னணி பகுதியிலிருந்து ரஷ்ய படைப்பிரிவுகள் பின்வாங்கியுள்ளதாக உக்ரைன் இராணுவம் அறிவித்துள்ளது.

இது குறித்து உக்ரைன் தரைப்படை பிரிவுத் தளபதி தெரிவிக்கையில்,

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் மீண்டும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன் பாக்முட்டின் சில பகுதிகளில் உக்ரைனின் எதிர்த்தாக்குதல்களை சமாளிக்க முடியாமல் சுமார் 2 கிலோ மீட்டர் வரை ரஷ்ய படைகள் பின்வாங்கியுள்ளன-என்றார்.

இந்த தாக்குதலை சமாளிக்க முடியாது ரஷ்ய படை வீரர்கள் சிலர் தப்பியோடும் காணொளியும் வெளியாகியுள்ளதாக கூறப்படுகின்றது.

ரஷ்யா முறையாக வெடிமருந்துகளை வழங்கத்தவறியதால் தங்களது வீரர்கள் பாக்முட்டில் இருந்து வெளியேறிக் கொண்டிருப்பதாக ரஷ்யாவின் வாக்னர் குழு தலைவர் கூறி வரும் நிலையில், அவரது கூற்றை மேற்கோள்காட்டி உக்ரைன் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

உக்ரைன் மீது, 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி முதல், ரஷ்ய படையினர் தாக்குதல் நடத்தி வரும் நிலையில்,இதற்கு உக்ரைன் படைகளும் பதிலடி கொடுத்து வருகின்றன.

இந்த போரில் இதுவரை 7 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் பலியாகியுள்ளதாகவும், 80 இலட்சம் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# ஜெய்ஸ்வாலின் அதிரடியில் ராஜஸ்தான் அபார வெற்றி!

கொல்கத்தா, மே 13


ஜெய்ஸ்வாலின் அதிவேக அரைச்சதம் என்ற சாதனையுடன் 13 ஓவர்களில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியை வீழ்த்தியது ராஜஸ்தான் றோயல்ஸ் அணி.

கொல்கத்தா ஈடன் கார்டனில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்த போட்டியில் கொல்கத்தா - ராஜஸ்தான் அணிகள் மோதின.

கொல்கத்தா நிர்ணயித்த 150 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் 13.1 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து இல்கை எட்டி வெற்றி பெற்றது.

முதல் ஓவரை நிதிஷ் ராணா வீசினார். அவரின் பந்தில் 26 ஓட்டங்களை குவித்தார் ஜெய்ஸ்வால். அவரின் அதிரடியான துடுப்பாட்டத்தால் 13 பந்துகளில் அவர் அரைச்சதம் தொட்டார். ஐ. பி. எல். அரங்கில் பதிவான அதிவேக அரைச்சதமாக இது அமைந்தது.

அவருடன், தொடக்கம் கொடுத்த ஜோஸ் பட்லர் எதிர்பாராத விதமாக ரன் அவுட் ஆனார். ஆனால், ஜெய்ஸ்வாலுக்கு துணையாக அணித் தலைவர் சஞ்சு சாம்சன் அதிரடியில் மிரட்டினார்.



ஜெய்ஸ்வால் 5 சிக்ஸர்கள், 12 பௌண்ட்ரிகளை விளாசி 47 பந்துகளில் 98 ஓட்டங்களைப் பெற்றார். சஞ்சு சாம்சன் 5 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 29 பந்துகளில் 48 ஓட்டங்களை குவித்தார்.

13.1 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து ராஜஸ்தான் அணி 151 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

முன்னதாக, இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைற் ரைடர்ஸ் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 148 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

துடுப்பாட்டத்தில் முதல் 6 பேர் இரு இலக்க ஓட்ட எண்ணிக்கையைப் பெற்ற போதிலும் இருவர் மாத்திரமே 20 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர்.

வெங்கடேஷ் ஐயர் 57 ஓட்டங்களையும், நிதிஷ் ராணா 22 ஓட்டங்களையும் பெற்றனர். அவர்கள் இருவரும் 3ஆவது விக்கெட்டில் பகிர்ந்த 48 ஓட்டங்களே அணியின் சிறந்த இணைப்பாட்டமாக அமைந்தது.

பந்துவீச்சில் யுஸ்வேந்த்ர சஹால் 4 விக்கெட்களையும் ட்ரென்ட் போல்ட் 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)



## யஷஸ்வி ஜெய்ஸ்வால் அதிவேக அரைச்சதம்!

கொல்கத்தா, மே 13

கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் ராஜஸ்தானின் யஷஸ்வி ஜெய்ஸ்வால் அதிவேக அரைச்சதம் அடித்து சாதனை படைத்துள்ளார்.

முதல் ஓவரிலேயே 6, 6, 4, 4, 2, 4 என 26 ஓட்டங்களை விளாசினார். இது கிரிக்கெட் வரலாற்றில் முதல் ஓவரில் குவிக்கப்பட்ட அதிக ஓட்டங்கள் என்ற சாதனையாக அமைந்தது.

அடுத்த ஓவரிலும் ஜெய்ஸ்வால் இரு பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸரை விளாசினார். அதன் பின்னர், தொடர்ச்சியாக 3 பௌண்ட்ரிகளை விரட்டினார். 12 பந்துகளில் 49 ஓட்டங்களை தொட்ட அவர், 13ஆவது பந்தில் அரைச்சதத்தை தொட்டார். (ஐ)



## அதிக விக்கெட்கள் வீழ்த்தி சாஹல் புதிய சாதனை

கொல்கத்தா, மே 13

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் அதிக விக்கெட்களை கைப்பற்றி சாதனை படைத்துள்ளார் சுழல்பந்து வீச்சாளர் யஸ்வேந்திர சாஹல்.

2013 முதல் ஐ. பி. எல். கிரிக்கெட் விளையாடி வருகிறார் சாஹல். மும்பை இந்தியன்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், ராஜஸ்தான் றோயல்ஸ் என்று மூன்று அணிகளுக்காக அவர் தனது பங்களிப்பை வழங்கியுள்ளார். தற்போது ராஜஸ்தான் அணியின் ஆஸ்தான சுழல் பந்துவீச்சாளர்களில் இவரும் ஒருவர்.

143 ஐ. பி. எல். போட்டிகளில் விளையாடி 520.5 ஓவர்களை வீசியுள்ளார். 187 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார். ஒரே இன்னிங்ஸில் 4 விக்கெட்களுக்கு கூடுதலாக 7 முறை கைப்பற்றியுள்ளார். நடப்பு தொடரில் 12 போட்டிகளில் விளையாடி 21 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார்.

20 விக்கெட்களுக்கும் கூடுதலாக 5 தொடர்களில் கைப்பற்றியுள்ளார். முறையே 2015, 2016, 2020, 2022, 2023 என அது உள்ளது.

அதிக விக்கெட்களை வீழ்த்திய வீரர்கள் பட்டியலில் 187 - யஸ்வேந்திர சாஹல், 183 - டுவைன் பிராவோ, 174 - பியூஷ் சாவ்லா, 172 - அமித் மிஸ்ரா, 171 - அஸ்வின். (ஐ)

## சச்சின் சாதனையை முறியடிக்கும் தருணம் உணர்ச்சிகரமாக இருக்கும்

விராட் கோலி


புதுடில்லி, மே 13

“சச்சினின் சாதனையை முறியடிக்கும் தருணம் மிகவும் உணர்ச்சிகரமாக இருக்கும்,” என கோலி தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் 50. கடந்த 2011இல் ஓய்வு பெற்ற இவர், 200 டெஸ்ட் (15,921 ஓட்டங்கள் -51 சதம்), 463 ஒருநாள் (18426 ஓட்டங்கள், 49 சதம்), ஒரு சர்வதேச ‘இருபது -20’ போட்டிகளில் விளையாடியுள்ளார். சதத்தில் சதம் அடித்த அவரின் சாதனையை முறியடிப்பது கடினம் என்று கூறப்படுகின்றது.

இருப்பினும் ஒருநாள் அரங்கில் அதிக சதம் விளாசிய சச்சினின் சாதனையை இந்தியாவின் விராத் கோலி நெருங்கி வருகிறார். இதுவரை 274 போட்டியில் விளையாடிய கோலி, 46 சதம் அடித்துள்ளார். கோலி இன்னும் 4 சதம் அடித்தால் சச்சினின் சாதனையை முறியடிக்கலாம்.

இதுகுறித்து கோஹ்லி கூறுகையில், “சச்சினின் சாதனையை முறியடித்தால் அது எனக்கு மிகவும் உணர்ச்சிகரமான தருணமாக இருக்கும். விளையாட்டு நமக்கு ஒழுக்கம், திட்டமிடல், வாழ்க்கையை கற்பிக்கிறது. நீங்கள் எந்த வேலை செய்தாலும், விளை யாடுவதன் மூலம் கிடைக்கும் மதிப்பு மகத்தானது,” என்றார்.



## இந்தியாவை பின்தள்ளி பாகிஸ்தான் முன்னிலை!

டுபாய், மே 13

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையை வெளியிட்டது. இதில், பாகிஸ்தான் இரண்டாவது இடத்தைப் பிடிக்க இந்தியா மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா தனது புள்ளிப்பட்டியலில் 113இல் இருந்து 118 ஆக உயர்த்தியது. பாகிஸ்தான் (116) மற்றும் இந்தியா (115 ) ஆகியவற்றில் 2ஆவது மற்றும் 3ஆவது இடங்களில் உள்ளன. 3ஆவது இடத்தில் இருந்த பாகிஸ்தான் நியூசிலாந்துக்கு எதிரான தொடரை 4-0 என்று கைப்பற்றிய நிலையில் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

நியூசிலாந்து 104 புள்ளிகளுடன் 4ஆவது இடத்திலும், இங்கிலாந்து 101 புள்ளிகளுடன் 5ஆவது இடத்திலும் உள்ளன. தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அடுத்த இடங்களில் தொடர்கின்றன. (ஐ)



## தெரிவாளர்களின் பார்வையை ஜெய்ஸ்வால் தன்பக்கம் ஈர்த்துள்ளார்!

ஹர்பஜன் சிங் புகழாரம்

மும்பை, மே 13

யஷஸ்வி ஜெய்ஸ்வால் தனது அதிரடி துடுப்பாட்டத் திறன் மூலம் இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வாளர்களின் பார்வையை தன் பக்கமாக திருப்பியுள்ளார் என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார்.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் கொல்கத்தா அணிக்கு எதிராக 13 பந்துகளில் அரைசதம் பதிவு செய்தார் ஜெய்ஸ்வால். இதன் மூலம் ஐபிஎல் கிரிக்கெட்டில் அதிவேக அரைசதம் எட்டிய வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

நடப்பு தொடரில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள மைதானங்களில் நடைபெற்று வருகிறது. குறிப்பிட்ட மைதானம் என்று இல்லாமல் எங்கு சென்றாலும் சிறப்பாக ஓட்டங்களை குவித்து வருகிறார் அவர். நடப்பு தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்த துடுப்பாட்ட வீரர்களில் இரண்டாவது இடத்தில் உள்ளார். முதல் இடத்தில் உள்ள டு பிளசிஸுக்கும் அவருக்கும் ஒரே ஓர் ஓட்டடம் மட்டும் தான் வித்தியாசம்.

“ஜெய்ஸ்வால், இந்திய கிரிக்கெட் அணியில் தனக்கான வாய்ப்புக்கான கதவை வெறுமனே தட்டவில்லை. தொடர்ச்சியாக ரன் குவித்து அதை தகர்த்துள்ளார். தனது அபார உள்ளூர் கிரிக்கெட் தகுதியே அப்படியே ஐபிஎல் கிரிக்கெட்டிலும் தொடரச் செய்துள்ளார். என்ன ஒரு திறன் படைத்த வீரர். இந்திய கிரிக்கெட்டின் எதிர்காலம் சிறப்பான வீரர்களின் கைகளில் இருக்கிறது. இதன் மூலம் தேர்வாளர்களின் பார்வையை தன் பக்கமாக திருப்பியுள்ளார்” என ஹர்பஜன் தெரிவித்துள்ளார்.

ரவி சாஸ்திரி, விராட் கோலி என பலரும் இளம் வீரரான ஜெய்ஸ்வாலின் ஆட்டத்தை புகழ்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சுவீடனுக்கு பயணமானார் வெளிவிவகார அமைச்சர்!

## பல நாடுகளுடன் இரு தரப்பு சந்திப்பு

கொழும்பு, மே. 13

**ஸ்ரொக்ஹோமில் இன்று நடைபெறும் இரண்டாவது இந்தோ-பசிபிக் அமைச்சர்கள் அமர்வில் கலந்துகொள்வதற்காக, வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி சுவீடன் தலைநகர் ஸ்ரொக்ஹோமுக்கு பயணமானார்.**



இந்த அமர்வு, ஐரோப்பிய ஒன்றிய சபையின் சுவீடிஷ் தலைமைத்துவத்தின் கீழ், ஐரோப்பிய வெளியுறவு செயற்பாட்டு சேவையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அமர்வில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அமர்வுக்கு சுவீடன் வெளியுறவு அமைச்சர் டோபியாஸ் பில்ஸ்ட்ரோம் மற்றும் வெளியுறவு, பாதுகாப்புக் கொள்கைக்கான உயர் பிரதிநிதி, ஐரோப்பிய ஆணையத்தின் துணைத் தலைவர் ஜோசப் பொரெல் ஆகியோர் இணைத் தலைமை தாங்குகின்றனர்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அமர்வின் மூன்று வட்ட மேசை மாநாட்டின் ஒன்றான 'மேலும் நிலையான செழுமையை ஒன்றாகக் கட்டியெழுப்புதல்' என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறும் 01ஆவது வட்டமேசை கலந்துரையாடலுக்கு இணைத் தலைமை தாங்கவுள்ளார்.

ஆஸ்திரியா, டென்மார்க், பின்லாந்து, லத்வியா, நெதர்லாந்து, ருமேனியா மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் உட்பட, பல நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் அமைச்சர் அலி சப்ரி இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்துவார்.

சுவீடனிலுள்ள வர்த்தக சமூகத்தை குறிப்பாக வகைமை நிர்வாக அதிகாரிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறையின் மூத்த அதிகாரிகளையும் அமைச்சர் சந்திக்க உள்ளார். (அ)

# வன்னி மக்கள் ஒன்றியம் உருவாக்கம்



வவுனியா, மே. 13

வன்னியில் வாழும் மூவின மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி வன்னி மக்கள் ஒன்றியம் என்ற அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்த அமைப்பின் மூலம் இனங்களுக்கிடையில் ஏற்படும் பிரச்னைகள் அடையாளம் காணப்பட்டு அவை நிவர்த்தி செய்யப்படும்.

அத்துடன் அரசியலுக்கு அப்பாற்பட்டு செயற்படுவதுடன் நாடு தழுவிய ரீதியில் இந்த அமைப்பின் செயற்பாடுகளை கொண்டு செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வவுனியா தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுமக்கள் நலன் விரும்பிகள் என பலர் கலந்துகொண்டனர். (அ)

# வேட்பாளர்களான அரச ஊழியர்களின் பிரச்னைகளுக்கு வெகுவிரைவில் தீர்வு

கொழும்பு, மே. 13

வேட்பாளர்களான அரசாங்க ஊழியர்களின் சம்பளம் உள்ளிட்ட பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. எஞ்சிய சிறுசிறு பிரச்னைகள் தொடர்பில் மீண்டும் தேர்தல் ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்தி தீர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென, பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவைக்குச் சென்று அவர்களுக்கான சம்பளத்தை பெற்றுக் கொடுக்க நாம், நடவடிக்கை எடுத்தோம். இந்த விடயத்தில் நாம் தேர்தல் சட்டத்தை முழுமையாக நிராகரித்து செயற்பட முடியாது. பொது நிர்வாக அமைச்சர் என்ற வகையில் அதனைப் பின்பற்றியே, நடவடிக்கைகளை முன்னெடுத்ததாகவும் பிரதமர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்னோடு பேசும்போதும் இது தொடர்பில் கலந்துரையாடினார்.

முதலில் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை நாம் மறந்துவிடக்கூடாது. அந்த வகையில் இந்த விடயம் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஒன்றாகும்.

இரண்டாவதாக தேர்தல் சட்டமென ஒன்று நடைமுறையில் உள்ளது. அது, நாம் அனைவரும் இணைந்து நிறைவேற்றிய சட்டம். அந்த வகையில் இது விடயத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு இணங்கவே நாம் செயற்பட முடியும்.

தேர்தல் ஆணைக்குழுவின் நிபந்தனையின்படியே அவர்கள் கடமைக்கு செல்வது தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளோம். நாம் தேர்தல் ஆணைக்குழுவை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி இந்த செயற்பாடுகளை மேற்கொண்டோம்.

தற்போது பெருமளவானோருக்கு இந்த நிவாரணம் கிடைத்துள்ளது. சில இடங்களில் சிக்கல்கள் இருக்கலாம். அதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஏற்கனவே கேட்டுக் கொள்ளப்பட்டதுபோல், நாம் அவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தோம். தாம் போட்டியிடும் தேர்தல் தொகுதிக்கு வெளியே அருகிலுள்ள பிரதேசத்தில் கடமைக்குச் செல்லுமாறு நாம் சுற்றறிக்கை வெளியிட்டிருந்தோம்.



அவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படும் இடம் தொடர்பில் பிரச்னைகள் இருந்தால் தேர்தல் ஆணைக்குழுவுடன் பேசி அதனை தீர்க்க முடியும். எவ்வாறெனினும் முழுமையாக தேர்தல் சட்டத்திற்கு மாறாகச் செயற்பட முடியாது.

வேட்பாளர்களான அரசாங்க ஊழியர்கள் விடுத்த வேண்டுகோள் தொடர்பிலும் நாம் தேர்தல் ஆணைக் குழுவுடன் அவ்வப்போது கலந்துரையாடியுள்ளோம்.

இதில் எந்த அரசியல் பிரச்னையும் கிடையாது. இதில் சிறிய சரி செய்தல் ஒன்று மட்டுமே உள்ளது என்பதை நாம் உணர வேண்டும்-என்றார். (அ)

## ரூ. 76 இலட்சம் நிதி முறைகேடு;

# கொழும்பு பிரபல பாடசாலை அதிபர் பதவியிலிருந்து நீக்கம்

கொழும்பு, மே. 13

கொழும்பில் உள்ள பிரதான பாடசாலை ஒன்றில், மாணவர்களை சேர்க்கும்போது சுமார் 76 இலட்சம் ரூபா நிதியை முறைகேடு செய்ததாகக் கூறப்படும் அதிபர் ஒருவர் அந்தப் பாடசாலையில் இருந்து நீக்கப்பட்டு கொழும்பு கல்வி வலயத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

அதிபருக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டு வரும் நிலையில், அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் அவர் கல்வி அமைச்சில் இணைக்கப்பட்ட பின்னர் கொழும்பு கல்வி வலயத்திற்கு விடுவிக்கப்பட்டதாக கல்வி அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# சுற்றுலா சென்ற இளம்பெண் காட்டு யானை தாக்கிப் பலி!

## கொஸ்லாந்தை பகுதியில் சோகம்

கொழும்பு, மே. 13



பண்டாரவளை, கொஸ்லாந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் தியலுமபகுதியில் உள்ள நீர்வீழ்ச்சிப் பகுதியில் தற்காலிக கூடாரம் அமைத்து தங்கியிருந்த இளைஞரும், யுவதியும் காட்டு யானை தாக்குதலுக்கு இலக்கான நிலையில், யுவதி சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

படுகாயமடைந்த இளைஞன் கொஸ்லாந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக தியத்தலாவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குருநாகல் வாரியபொல பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞரும், மாத்தறைப் பகுதியைச் சேர்ந்த 23 வயது யுவதியும் சுற்றுலா வந்த நிலையில், நீர்வீழ்ச்சிப் பகுதியில் கூடாரம் அமைத்து நேற்று முன்தினம் இரவு தங்கியுள்ளனர்.

இரவுவேளையிலேயே அவர்களை காட்டு யானை தாக்கியுள்ளது.

உயிரிழந்த யுவதியின் சடலம், நீதவான் பரிசோதனைக்காக சம்பவ இடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் கொஸ்லாந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# பாடசாலைக்கு அருகில் கொட்டப்படும் குப்பை!

## கடும் பாதிப்பை எதிர்கொள்ளும் மாணவிகள்

வவுனியா, மே. 13

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரிக்கு அருகில் பொதுமக்களால் குப்பைகள் போடப்பட்டு வருவதனால் பாடசாலை மாணவிகள் சுவாச பாதிப்பை எதிர்கொண்டு வருவதாக பெற்றோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்நிலையில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் குப்பை கொட்டுபவர்கள் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கதீர்மானித்துள்ளனர்.

வவுனியாவில் பல வீதிகளிலும் பொறுப்பற்ற விதத்தில் பொதுமக்களால் குப்பைகள் கொட்டப்பட்டு வருவதனால் துர்நாற்றம் வீசும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள வெற்றுக்காணி மற்றும் அதனோடு இணைந்த வீதியில் பொதுமக்கள் தமது வீட்டுக் கழிவுகள் மற்றும் வாகன திருத்தக கழிவுகள் குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன.

அந்தக் காணியில் குப்பையை கொட்டாதீர்கள் என பதாதை போடப்பட்டுள்ள நிலையில் குப்பைகள் போடப்பட்டு வருகின்றன.

இதனால் பாடசாலையில் கற்கும் மாணவிகள் சுவாச பிரச்னையை எதிர்கொண்டு வருவதாக பாடசாலை சமூகம் மற்றும் பெற்றோர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அறிவித்ததை அடுத்து குறித்த இடத்துக்கு சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அந்தப் பகுதியை பார்வையிட்டனர். இதன்போது வவுனியா பொலிஸாரும் குறித்த இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

இதன்போது முகவரியிடப்பட்ட வங்கிக் கடிதங்கள், காசோலைகள், வாகனத் திருத்தகத்தின் பற்றுச்சீட்டுக்கள் உட்பட பல ஆதாரங்களை பெற்றுக்கொண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முனைப்பு காட்டியுள்ளனர்.

இதேவேளை வவுனியாவில் வீதியோரங்களில் குப்பைகள் போடுபவர்கள் தொடர்பிலும் தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

## கூலிக்காக...

மறைவாகியிருந்த நிலையில் காங்கேசன் துறை பொலிஸ் பிராந்திய புலனாய்வு பிரிவினரால் இவர்கள் கைது செய்யப் பட்டனர்.

நீண்ட நாள் முரண்பாடு காரணமாக 10 நாட்களுக்கு முன்னர் 54 வயது குடும் பஸ்தரை கும்பல் ஒன்று தாக்கியது. இதில், படுகாயமடைந்த அவர் பருத்தித் துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, யாழ். போதனா மருத் துவமனைக்கு மாற்றப்பட்டு தற்போது அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த நிலையில், தாக்குதலை நடத் தியவர்கள் தமது முகங்களை மறைத்து ரிக்ரொக் செயலியில் அந்தக் காணொ லியை பதிவிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் நெல்லி யடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனிடையே, தாக்கு தல் சந்தேகநபர்கள் தலைமறைவாகியி ருந்தனர்.

இந்த நிலையில் காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சக ரின் கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவினர் 8 பேரை நேற்றிரவு கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வாள்கள், கூரிய ஆயுதங்கள் மற்றும் பொல்லுகள் கைப் பற்றப்பட்டன.

இந்தக் கும்பலுக்கு வெளிநாடுகளிலி ருந்து பணம் அனுப்பப்படுவதாகவும் கூலிக்கு பணம் பெற்று வன்முறைச் சம்ப வங்களில் ஈடுபடுகின்றனர் என்றும் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்கள் 8 பேரும் இன்றைய தினம் பருத்தித்துறை நீதிவான் முன்னி லையில் முற்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

## ஆட்சி...

கிய - நடுத்தர மற்றும் நீண்ட கால கொள்கை வகுப்பு உப குழுவின் தலை வரும் பாராளுமன்ற உறுப்பி னருமான நாமல் ராஜ பக்ஷ தெரிவித்தார்.

தேசிய பேரவையின் குறுகிய,நடுத்தர மற்றும் நீண்ட கால தேசிய கொள்கை களை வகுப்பதில் முன்னுரிமைகளை அடையாளம் காணல் பற்றிய உப குழு வின் முதலாவது இடைக்கால அறிக் கையை நேற்று வெள்ளிக்கிழமை பாரா ளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற் றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

மேலும், பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பொருளாதார மீட்சிக்கான குறுகிய - நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைகளை வகுப்பது தொடர்பில் பாராளுமன்றத்தில் விசேட உப குழு அமைக்கப்பட்டது.

கொள்கை உருவாக்கத்துக்காக அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவ னங்கள் உட்பட பல்வேறு தரப்பினரு டன் பேச்சுகளை மேற்கொண்டோம். முன்வைக்கப்படும் கொள்கை திட்டங் களை முறையாக செயல்படுத்தாவிட் டால் அது பாராளுமன்றத்துக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாக காணப்படும். சமர்ப்பிக்கப்படும் அறிக் கைகளை அரசியலமைப்பு ஊடாக உறுதிப்படுத்தப்பட்ட தாபனம் ஊடாக செயற்படுத்தாவிட்டால் 10ஆவது பாரா ளுமன்றத்திலும் பிறிதோர் உப குழுவை அமைத்து ஆராய வேண்டும்.

தேசிய கொள்கை தொடர்பான ஆணைக்குழுவை ஸ்தாபிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த விடயத் தில் எதிர்க்கட்சிகள் உட்பட பாராளு மன்றத்தின் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் தங்களின் நிலைப் பாட்டை முன்வைக்க வேண்டும். நிலை யான சிறந்த மாற்றத்துக்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

அரசாங்கங்கள் மாற்றமடையும் போது பொருளாதார கொள்கைகள் மாற்றமடைந்தால் ஒருபோதும் முன் னேற்றமடைய முடியாது. ஆட்சி மாறி னாலும் பொருளாதார கொள்கை மாற்ற மடைய கூடாது என்ற வகையில் அரசிய லமைப்பு ஊடாக உறுப்பாட்டை ஸ்தா பிக்க வேண்டும் - என்றார். (ஐ)

# தமிழர்கள்மீது அரச அடக்குமுறையை இறுக்கவே திருமலையில் புத்தர் சிலை!

## தமிழ்த் தேசியக் கட்சி தலைவர்

யாழ்ப்பாணம், மே 13

தமிழ் மக்கள் மீது இனவெறித் தாக் குதல்களை ஏதாவது ஓர் இடத்தில் ஆரம் பித்து வைக்கவும் அதனை சாட்டாக வைத்து தமிழ் பிரதேசமான வட, கிழக்கு மாகாணங்களில் அரசாங்க அடக்கு முறையை மேலும் இறுக்கிக் கொள்ளும் நோக்கத்துடனே திருகோணமலையில் புத்தர் சிலை வைக்கப்பட திட்டமிடப் பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கட்சி தலைவர் ந. சிறிகாந்தா சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக் கையில்,

எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை திருகோணமலை நகரில், கடற்கரை வீதியில், விளையாட்டு அரங் குக்கு முன்னால் காணப்படும், நான்கு அரச மரங்கள் அமைந்திருக்கும் இடத் தில், புத்த பெருமானின் சிலை ஒன்று பிரதிஷ்டை செய்யப்படும் நிகழ்வு இடம் பெற உள்ளது.

தாய்லாந்தில் இருந்து கொண்டுவரப் பட்டுள்ள, நான்கு அடி உயரமான புத்தர் சிலையுடன், இலங்கைக்கு வந்துள்ள 50 பௌத்த பிக்குகள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவிருக்கின்றனர். இலங் கையில் தமிழ் மக்களின் நீண்ட வரலாற் றில் முக்கிய இடம் வகித்து வந்திருக்கும் திருகோணமலை மண்ணில், இந்த புத்தர் சிலை நாட்டப்படுவதற்கு போலியான காரணங்கள் வரலாற்றை திரிபுபடுத்தி முன்வைக்கப்பட்டுள்ளன. கடந்த சில ஆண்டுகளாக புத்தரின் சிலைகளை ஆயுதமாக பயன்படுத்தி, தொல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையோடு, தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டு வந்தி ருக்கும் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் நீட்சியாகவே, இந்த புத்தர் சிலை பிரதிஷ்டம் நிகழ்த்தப்பட உள்ளது.

அரசாங்கத்தின் முழுமையான ஆதரவோடு தான் இது மேற்கொள்ளப் படுகின்றது என்பதில் எந்தவொரு சந்தேகமும் இருக்க முடியாது.

இந்த, இன - மத ரீதியிலான ஆக் கிரமிப்புக்கு எதிராக, தமிழர் தரப்பில் எழுப்பப்படும் குரல்களை மௌனிக்க வைக்கும் நோக்கத்தோடு, வடித்தெடுத்த இனவெறியரான அரசாங்கக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மிரட்டல் தொனியில் பாராளுமன்றத் தில் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார். நிகழ்வை தடுத்து நிறுத்த முயன்றால், பாரிய அழிவுகள் ஏற்படும் என்றும் அவர் கர்ச்சித்திருக்கின்றார்.

அவரைப் போன்ற சிங்கள இனவெறி யர்களின் மிரட்டல்கள், நீண்ட பல வரு டங்களாக தமிழ் மக்களுக்கு பழகிப் போன சங்கதிகளாக இருந்தாலும் கூட, இனக் குரோதத்தை தூண்டுகின்ற இத்தகைய பேச்சுக்களை, இவரும் இவ ரைப் போன்றவர்களும் பாராளுமன் றத்துக்கு வெளியிலும் தொடர்ந்து நிகழ்த்தி வந்திருக்கின்றார்கள்.

ஒரு சில வாரங்களுக்கு முன்னர், 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு முன்வைக் கப்பட்டிருக்கும் தமிழ்க் கட்சிளின் கோரிக்கை பற்றி பேசிய எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீர வங்ச, 13வது திருத்தம் நடைமுறைப் படுத்தப்பட்டால் கடந்த காலங்களில் இலங்கை சந்தித்த கலவரங்களை விட, மிக மோசமான கலவரம் வெடிக்கும் என, தனக்கே உரிய பானியில் மிரட்டல் விடுத்திருந்தார். நாட்டின் அமைதியை குலைக்கக் கூடிய அபாயத்தைக் கொண் டிருக்கும் இத்தகைய இனவெறிப் பேச்சுக்கள் தொடர்பில், எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டி ருக்கவில்லை.

இந்த சூழ்நிலையில், திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் இந்தச் சவாலை நிதானத்தோடு எதிர்கொள்வதே உகந்தது ஆகும். தமிழ் மக்கள் மீது இனவெறித் தாக்குதல்களை, ஏதாவது ஒரு இடத்தில் ஆரம்பித்து வைக்கவும், அதனை சாட் டாக வைத்து தமிழ்ப் பிரதேசமான வட, கிழக்கு மாகாணங்களில் அரசாங்க அடக்கு முறையை மேலும் இறுக்கிக் கொள்ளவும், நிகழ்ச்சிநிரல் தீட்டப்படு வதாகவே சந்தேகிக்க வேண்டி உள்ளது. நாட்டில் நிலவிக்கொண்டிருக்கும் நெருக்கடி மிக்க சில பிரச்சினைகளுக்கு உடனடிப் பரிகாரமாகவும் இதனை சில சக்திகள் கருதக்கூடும்.

இத்தகைய பிரச்னைகளுக்கு எல்லாம் எதிர்ப்பு தெரிவித்தே சமீபத்தில் கடைய டைப்பு மேற்கொள்ளப்பட்டது. அத்து டன் நிறுத்திக் கொள்ளாமல், எதிர்ப்பு நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்பதே திருகோணமலை புத்தர்சிலை விவகாரம் உணர்த்தி நிற்கும் செய்தியாகும். கட்சி வேறுபாடின்றி தமிழ் மக்களை அணிதிரட்டி, பாதிக்கப் பட்டிருக்கும் முஸ்லீம் மக்களின் ஆதரவை யும் கோரி, பாரிய அரசியல் போராட் டம் ஒன்றை மேற்கொள்வது என்பதே இன்றைய உட னடித் தேவையாகும். (ஐ)

## சமுர்த்தி...

வங்கி என்பன நலன் புரி கொடுப்பனவு களை அதிகரிக்குமாறு அறிவுறுத்தி யுள்ளன. அரசியல் தலையீடுகள் இன்றி தகுதியானவர்க ளுக்கு நன்மைகளை வழங்குமாறு அந்த அமைப்புக்கள் கோரிக்கை விடுத் துள்ளன என்றும் இரா ஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

## நேற்றைய...

பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக, ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவுக்கும் வடக்கு, கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான பேச்சு நேற்று முன்தினம் ஆரம்பமானது. நேற்று முன்தினம் நடந்த இந்தப் பேச்சில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் காணி பிரச்னை மற்றும் ஏனைய பிரச்னைகள் தொடர்பாக ஆராயப்பட்டன. நேற்றைய பேச்சில் அதிகாரப் பகிர்வு, நல்லிணக்க முயற்சி கள் தொடர்பாக பேசப்பட இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பௌத்த...

இந்த நிலையில், இங்கு பௌத்த சின்னங்கள் உள்ளன என்று வரலாற்றை திரிபுபடுத்துவதுடன், தாய்லாந்தில் இருந்து வரும் பிக்குகள் குழு என்று பௌத்த மத அடையாளங்களை நிறுவ முயல்கின்றது.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழர் வாழ்வுரிமை மையம், தமிழ்த் தேசியப் பேரவை என்பன இணைந்து கவனவீர்ப்பு போராட்டத் துக்கு அழைப்பு விடுத்துள்ளன. (ஐ)

## உயிர்...

இலக்கு வைத்து நடத்தப்படும் தொடர் தாக்குதல்களின் ஆரம்பம் - என்று எச்சரித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

"பியத் நிகேஷலமீது கடந்த 10ஆம் திகதி மொட்டு கட்சியின் கடுவலை நகர முன்னாள் துணை முதல்வர் தாக்குதல் நடத்தினார். இது காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள்மீதான சமீபத்தில் நடந்த முதலாவது தாக்குதல். முழுப் போராட்டத்துக்கும் நடத்தப்படும் தாக் குதல்களின் முதல் அடியே இது. மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அனை வரும் கும்பல்களின் தாக்குதலுக்கும் கொலை அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியுள் ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட அமைதி போராளிகளின் உயிரைப் பாதுகாப்ப தற்காக செயல்படுமாறு சபாநாயகர், பிரதமர் தலைமையிலான அரசாங்க அதிகாரிகளை கேட்டுக் கொள்கிறேன். மேலும், தாக்குதலுக்கு உள்ளாகும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள நபர்களின் பெயர் பட்டியல் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் நேற்று பாராளுமன்றில் சுட்டிக் காட்டினார். (ஐ)

# கோட்டாபய, கப்ராலின் பாதையில் இப்போதைய அரசும் செல்கின்றது

## சாடுகிறார் சம்பிக்க எம். பி.

கொழும்பு, மே 13

கோட்டாபய - கப்ரால் சென்ற தவ றான பாதையில் தற்போதைய அரசாங் கமும் செல்கிறது. 2023 ஆம் ஆண்டுக் கான வரவு- செலவு திட்டத்தின் பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய நாணயம் அச்சிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கடன் பெறல், நாணயம் அச்சிடல் இதனை தவிர்த்து எந்த திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை என பாராளு மன்றத்தில் சுயாதீனமாக செயல்படும் பாட்டலி சம்பிக்க ரணவக்க எம். பி. தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற் றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மொத்த தேசிய உற்பத்தியை அதிக ரித்தால் மாத்திரமே நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்.

திறைசேரி முறிகள் தொடர்பான சட்டமூலத்தை தற்போது அவசரமாக கொண்டு வந்துள்ளனர். இது முறையாக கலந்துரையாடப்படாது கொண்டு வரப் பட்டுள்ளது. இந்த அரசாங்கமும் முன் னாள் அரசாங்கம் போன்றே செயல்படு கின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ, அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்டோர் சென்ற பாதையிலேயே தற்போதைய ஆட்சி யாளர்கள் செல்கின்றனர். இவர்களால் தான் அதிகளவில் பணத்தை அச்சிடவும், அதிக வட்டி வீதத்தையும் அறவிட நேர்ந் தது. வரவு செலவுத் திட்டத்தின் பற்றாக் குறையையும் கடந்து நாங்கள் செல்கின் றோம். வருமானத்தை விடவும் செலவு அதிகரித்து மீண்டும் விழப் போகின்றோம்.

மத்திய வங்கி சட்டமூலத்தை கொண்டு வர தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதனை விவாதத்துக்கு எடுத்துக் கொள் ளாமல் பிற்போடப்பட்டது. மத்திய வங்கி சுயாதீனப்படுத்தப்பட்டால் அரசாங்கத்தின் விருப்பத்துக்கு அமைய திறைசேரி உண்டியல் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ள முடியாது. ஆகவே அரசாங்கத்தின் முறையற்ற செயல்பாடு கள் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்த னைகளுக்கு அமைய அரச மற்றும் தேசிய கடன்களை மறுசீரமைக்கும் போது சமூக கட்டமைப்பில் பெரும் பிரச்னைகள் தோற்றம் பெறும். ஆகவே சமூக கட்ட மைப்பின் தோற்றம் பெறும் பிரச்சினைக ளுக்கு தீர்வு காண அரசாங்கம் விசேட கவ னம் செலுத்த வேண்டும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu





# முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தின் முதல் நாள் நிகழ்வு யாழ்.பல்கலையில்

**யாழ்ப்பாணம், மே. 13**
**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் முதலாம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.**

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் உயிரிழந்த மக்களை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

இந்நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் முதலாம் நாள் நினைவஞ்சலி யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அருகே இடம் பெற்றது.

ஒரு நிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமாகிய நினைவேந்தலின்போது, பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டு, ஈகச்சுடர் ஏற்றப்பட்டது.

இதன்போது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளும் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

இறுதியில் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (அ)

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் நேற்று நல்லூரில்



யாழ்ப்பாணம், மே 13

யாழ்.மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஏற்பாட்டில் நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபன் நினைவிடத்துக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வார்த்தின் முதல் நாளான நேற்று வெள்ளிக்கிழமை இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

## சட்டவிரோத வாகனப் பாகங்கள் சுங்கத் துறையினரால் பறிமுதல்!

கொழும்பு, மே 13

உதிரிப் பாகங்கள் என்ற போர்வையில், பாகங்களாக பிரித்துக் கொண்டுவரப்பட்ட சில வாகனங்கள் அடங்கிய கொள்கலன் ஒன்று, சுங்கத்துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த கொள்கலனில் இருந்து, பாகங்களாக பிரித்துக் கொண்டுவரப்பட்ட நான்கு ஜீப் ரக வண்டிகளும், கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த வாகனங்கள், ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகவும் சுங்கத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# சோழர்காலத்தில் கட்டிய உருத்திரபுரீஸ்வரர் சிவாலய காணியிலும் தொல்பொருட்களாம்!

கிளிநொச்சி, மே 13

கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் ஆலயம் அமைந்துள்ள காணியில் தொல்பொருட்கள் இருப்பதாக தொல்லியல் திணைக்களம் அடையாளப்படுத்தியுள்ளது.

இந்துக்களின் பொற்காலமாகக் கருதப்படும் சோழர்காலத்தில் முற்று முழுதாக திராவிடக் கட்டடக் கலைமரபை பின்பற்றி உருத்திர புரீஸ்வரர் சிவாலயம் கட்டப் பட்டது.

வரலாற்றுத் தொன்மையும், பழமையும் வாய்ந்த சிவாலயத்தை அபகரிப்பதற்கான முயற்சிகள் தொல்பொருளியல் திணைக்களத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இந்நிலையில் உருத்திரபுரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள காணியில் புராதன தொல்லியல் சின்னங்கள் அமைந்துள்ளதாக தொல்லியல் திணைக்களம் கூறியுள்ளது.

ஆகவே குறித்த நிலப்பரப்பை எல்லைப்படுத்தும் நடவடிக்கையை எதிர்வரும் 18 ஆம் திகதி முன்னெடுக்க தீர்மானித்து கரைச்சி பிரதேச சபையினால் கடிதமும் கையளிக்கப் பட்டுள்ளது. (அ)

## சிறுவனுக்கு ஹெரோயினை கொடுத்து யாசகத்தில் ஈடுபடுத்திய பெண் கைது!

கொழும்பு, மே 13

கொலன்னாவை - ஒபேசேகரபுர பிரதேசத்தில் 11 வயதுச் சிறுவன் ஒருவனை வீதியில் யாசகத்தில் ஈடுபடுத்திய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேலியகொடவைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர், சிறுவனுக்கு ஹெரோயின் போதைப்பொருளை வலுக்கட்டாயமாக செலுத்தி, வீதியில் யாசகம் செய்ய ஈடுபடுத்திய குற்றச்சாட்டில் கடந்த 9ஆம் திகதி இந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிக்கடை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறுவனை தொடர்ந்து விசாரித்ததில், சந்தேகநபரால் அவர் அம்பேபுஸ்ஸ பகுதியில் உள்ள சிறுவர் இல்லமொன்றிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் அந்தப் பெண்ணின் மகனுடன் வீதியில் யாசகத்துக்காக அனுப்பப்பட்டமை தெரியவந்துள்ளது.

சிறுவனின் வாய் மற்றும் தொடை உட்பட பல்வேறு பகுதிகளில் பல தீக்காயங்கள் காணப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அவர் தற்போது கொழும்பு லேடி றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், பின்னர் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படும் என்றும் பொலிஸார் கூறினர்.

இதேவேளை, சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

## இலங்கைக்கு வருகை தந்துள்ள மற்றுமோர் அதிசொகுசு கப்பல்

கொழும்பு, மே 13



அண்மைக்காலமாக பல நாடு களிலிருந்தும் சுற்றுலா கப்பல்கள் இலங்கை நோக்கி வருகை தந்த வண்ணமுள்ளன.

இந்நிலையில் 420 சுற்றுலாப் பயணிகளுடன் மற்றுமொரு கப் பல் இலங்கையை நேற்று வந்தடைந்தது.

எம்.எஸ். யூரோப்பா-2 எனும் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வந்தடைந்துள்ளது. இந்தக் கப்பலில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

குறிப்பாக கதிர்காமம், சங்கிரில்லா கோல்ப் கிளப், யால, உடவளவ பூங்கா மற்றும் அம்பாந்தோட்டை சுற்றுலாத் தளங்களுக்கு இவர்கள் செல்லவுள்ளனர்.

அடுத்து வரும் இரு நாட்களில் சைப்பிரஸ் நாட்டை நோக்கி ஆளு எம்.எஸ். யூரோப்பா-2 பயணத்தை தொடரவுள்ளது. (அ)



## பெண் கடற்படை உறுப்பினர்கள் முதல்முறை கடல் கடமைகளில்!

கொழும்பு, மே 13

இலங்கை கடற்படையின் வரலாற்றில் முதல் தடவையாக கடல் சார் கடமைகளுக்காக பெண் கடற்படை உறுப்பினர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதில் இரண்டு பெண் அதிகாரிகளும், ஐந்து பெண் மாலுமிகளும் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த குழுவினர் நேற்று முன் தினம் இலங்கை கடற்படை படகான கஜபா/ஹவில் கடல் சார் கடமைகளில் இணைக்கப்பட்டனர்.

இதுவரை ஆண் கடற்படை உறுப்பினர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட கப்பல் கடமைகளில், பெண்களுக்கும் வாய்ப்பை வழங்க கடற்படை தீர்மானித்தது.

அதன்படி, 2022 ஒக்ரோபரில், பெண் அதிகாரிகள் மற்றும் மாலுமிகளுக்கு கையாளுதலில் அடிப்படை பாடநெறியை மேற்கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டது.

அங்கு, அடிப்படை வழிசெலுத்தல், கடற்படை, தீயணைப்பு, செய்தி பரிமாற்றம், போர் முதலுதவி மற்றும் கப்பல்கள் மற்றும் படகுகளின் மின்சார மற்றும் மின்னணு அமைப்பு பற்றிய தத்துவார்த்த மற்றும் நடைமுறை பயிற்சி திருகோணமலை, கடற்படை மற்றும் கடல்சார் நிறுவகத்தில் வழங்கப்பட்டது. (அ)

# மொட்டுக் கட்சியை அழிக்கவே முடியாது

### கூறுகிறார் விமலவீர திஸாநாயக்க

கொழும்பு, மே 13

"பொதுஜன பெரமுன கட்சி என்பது பீனிக்ஸ் பறவை போன்றது. எம்மை அழிக்க முடியாது. அழித்தாலும் மீண்டெழுவோம். இதனை மே தின கூட்டத்தில் நிரூபித்தோம்."

-இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், காலி முகத்திடல் போராட்டக்காரர்களை காடையர்கள் எனவும் அவர் விமர்சித்தார். (அ)

## வீட்டில் தனிமையிலிருந்த யுவதி மர்மமான முறையில் மரணம்!

கொழும்பு, மே 13

வீடொன்றில் தனியாக இருந்த 25 வயதுடைய திருமணமான யுவதி ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதாக இங்கிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இங்கிரிய, போதினாகல - யஹலவத்த பகுதியைச் சேர்ந்த யுவதியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவருக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்பு திருமணம் நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் கணவன் பணி முடிந்து வீட்டுக்கு சென்றபோது சமயலறையில் மனைவி மயங்கிய நிலையில் கிடப்பதைக் கண்டு உடனடியாக இங்கிரிய பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் அறிவித்துள்ளனர்.

யுவதி விழுந்து கிடந்த சமையலறைக்கு அருகாமையில் உள்ள அறையொன்றில், சுவரில் இருந்து மின் குதை (பிளக் பொயின்ட்) ஒன்று கழற்று காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடும் மழையின்போது மின்னல் தாக்கி குறித்த யுவதி உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.